# திராவிடநாடு


விலை
அணா
2

மலர்
14
இதழ்
44







மைசூரிலுள்ள பிலிகிரிரங்கன் குன்றில் தேரோட்டம் துவங்கிற்ரும். முட்டுக்கட்டைபோட்டு தேரை நடத்திச் செல்பவரே, சக்கரங்களில் அகப்பட்டு நசுங்கிச் செத்தாராம், உடனே தேரை நிறுத்த முயன்ற போது, தேரின்மீதிருந்தவர் கீழே குதிக்க, மக்கள் கூட்டத்தில் மிதிபட்டு அவர் செத்தாராம். மொத்தம் இறந்தவர் 3. படுகாயமடைந்தவர், பலர். நடைபெற்றது ஏப் 25-ந்தேதி.

*

ஏப் 26-ந்தேதி திருவையாறு பஞ்சநதி ஈசுவரன் கோவிலில் தேரோட்டம் வடக்கு வீதியில் வந்துகொண்டிருந்தபோது தேர்ச் சக்கரத்திலிருக்கும் இரும்புப்பட்டை சக்கரத்தில் மாட்டிக்கொண்டதாம். அதை சிரமப்பட்டு எடுத்துவிட்டுப் பின்னர், தேர் நகரும்போது, தீ பிடித்துக்கொண்டதாம். தீவட்டி பிடித்தவரின் அசாக்கிரதையென்கிருர்கள்!

*

'உலகெலாம் ஆளும், ஈசனுக்கு இப்படிப்பட்ட விபத்துக்கள் மட்டுமல்ல, உங்களுக்கு கவனமிருக்குமோ என்னவோ, கோர்ட்டு சம்மனும் 'ஜப்தி'யும் கூட வந்துவிட்டது! இப்போதல்ல, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு. பூரி ஜகன்னுதர் கோயிலிலிருந்து ரஸ்தாவரி ரு 9758—1—9 செலுத்தாததால் அதிகாரிகள் கோயிலைச் சேர்ந்த மூன்று தேர்களையும் ஜப்தி செய்தனர்.

*

இதைவிட அதிசயம் ராஜஸ்தானைச் சேர்ந்த சோடா என்ற ஊரில் நிகழ்ந்தது. அங்குள்ள கோயிலில் இருந்த விக்கிரகமே காணுமற் போய்விட்டதாம்! திருடியதும் யார் தெரியுமா? ராம்கோடிலால் கிரிதரிலால் எனும் அந்தக் கோயில் பூசாரி!!

*

திருச்செங்கோடு தாலுகா சாணர்பாளையம் எனும் ஊரில் வசிக்கும் கந்தசாமி என்பவர் மிகவும் பக்திமான். அவருக்கு இரண்டு குழந்தைகள். அவைகளுக்கு நோய் கண்டது. ஆண்டவன் போக்கிவிடுவார் என்று வேண்டிக் கொண்டார். ஆனல், இரு குழந்தைகளும் மாண்டன. கோபங்கொண்டு தான் வணங்கிய, மாரியம்மன் கோயில் விக்ரகத்தையும், பிள்ளையார் கோயில் சிலையையும் சுக்குநூருக உடைத்தெறிந்தாராம். செய்தி 1953-அக்டோபர் 20-ந்தேதி, எல்லா ஏடுகளிலும் வ்ந்திருந்தது.

*

குன்றக்குடி, சமீபகாலத்தில் மிகவும் அடிபடுகிறதல்லவா? அந்த ஊர் முருகன் கோயிலுக்குச் சொந்தமான மலைக்கோயில் அடிவாரத்தில், ஆதீனத்துக்குச் சொந்தமான காய்கறித் தோட்டத்தில் இரண்டு கஞ்சாச் செடிகள் வளர்க்கப்பட்டிருந்ததைப் போலீசார் கண்டுபிடித்து வழக்குத் தொடர்ந்தனர் 1953-ஜனவரியில்.

*

'பக்திமான்களின்' நிலையும், ஆண்டவர்களுக்கு ஏற்படும் 'ஆபத்தும்' இப்படியெல்லாமிருக்கிற சமயத்திலே, மிகப் படித்த மேதாவி இந்தியாவின் பெடரல் கோர்ட்டுக்கே நீதிபதியாயிருந்த சர். எஸ். வரதாச்சாரியார் (இன்னும் 'சர்' என்பதை மறவாமல் மித்திரன் போடுகிறது! அவர், தியாகி. ஆனல், 'சர்' பட்டத்தை வீசியெறிந்த பீ. டி. இரசன், துரோகி, இவைகளுக்கு) ஏப்ரல் 22-ந்தேதி மயிலாப்பூர் மாதவப்பெருமாள் கோயில் ராஜகோபுரத்துக்கு அஸ்திவாரக்கல் நாட்டினராம்.

*

அமைச்சர் பரமேஸ்வரன் எட்டுகுடி சித்ரா பௌர்ணமி விழாவில் போய்க் கலந்துகொண்டு களித்தாராம், இந்தக் கிழமை. ஏராளாமானேர், குடம் குடமாகப் பால் கொண்டு வந்து கொட்டினர்களாம்! சராசரி கால்வாசிப் பேருக்குக்கூட பால் கிடைப்பதில்லை என்று சில வாரங்களுக்கு முன்பு சர்க்காரால். 'பால் வாரம்' கொண்டாடப்பட்டதும், பக்தவத்சலம் சொன்மாரி மொழிந்ததும் உங்களுக்குக் கவனமிருக்கலாம்.

*

பக்தவத்சலம், இந்த வாரம் ஒரு அருஞ்சேவை செய்துள்ளார்! காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயில் கோபுரத்துக்கு மின்சார விளக்கு ஏற்றும் விழாவைச் செய்துவிட்டுப் போயிருக்கிருர்! மின்சார விளக்கு ஏற்றும் விழா. எப்படிப்பட்ட சமயத்தில்? முப்பது சதவிகிதம் குறைக்கிரும்-நாற்பது சதவிகிதம் வெட்டுகிரும்—என்று மின்சார குறைப்பு செய்து சர்க்கார் உத்தரவு பிறப்பித்துக் கொண்டிருக்கும் இச்சமயத்தில்!!

*

மதுரையில் ஏப் 26-ந் தேதி, ஒரு நாள் மின்சாரசப்ளையே அடியோடு நிறுத்தப்பட்டதாம். அதோடு, ஆலைத் தொழிலாளர்களுக்கு எல்லாம் விடுமுறையும் வழங்கப்பட்டதாம். எதற்கு தெரியுமா? தேரிழுக்கும் விழாவுக்காக! பாட்டாளிகளின் விடுதலைத் திருநாளான மேதினத்துக்கு விடுமுறை கிடையாது, இந்த ஆட்சியில். ஆனல், ஒடிந்தும், தீப்பிடித்தும், செத்தும், நசுங்கியும் மக்கள் அலையும் தேரோட்டத்துக்கு விடுமுறையாம் விடுமுறை!

*

'நமது புண்ய பூமி'யின் செய்திகளைப் படித்த உங்களுக்கு கிருஸ்துவ மதவாதிகள் வாழும் ஐரோப்பாவிலிருந்து இந்த வாரம் வந்த செய்திகள், இவை:—

கடலை எண்ணெய், தாவர எண்ணெய், மீன் எண்ணெய் இப்படி எந்த எண்ணெயை ஊற்றினுலும்–ஓடக்கூடிய கார் ஒன்றை டெட்ராய்ட் எனும்ஊரில் ஒரு அமெரிக்க என்சினியர் கண்டு பிடித்திருக்கிருர். கார், ஓட பெட்ரோல்தான் வேண்டும் என்கிற அவசியம் இல்லை! செலவும் சிக்கனமாம்!!

பிரஞ்சு நிபுணர்கள் பிளாஸ்டிக்கில் இயற்கை இருதயமொன்றை உருவாக்கியிருக்கின்றனர். 'இது சுமார் அரைராத்தல். மனித அல்லது பிராணி உடலில் இது பாதகமின்றி இயங்கக் கூடியது. மின்சாரவிசை உஷ்ணத்தை உண்டுபண்ணக்கூடுமாதலால் இந்த இருதயம் காற்று விசையினுல் இயங்கும். இரத்தக் குழாய்கள் பிணைக்கப்படும் இடங்கள் விசேஷரப்பரினுல் செய்யப்பட்டிருக்கின்றன.

★

ஆண்டுச் சந்தா
ரூ. 7

மலர் 14
இதழ் 44
6–5–56

# உரிமைத் திருநாள்

பஞ்சடைந்துபோன கண்களைத் தூக்கி, "தருமம்தாரு சாமி!" என்று ஈனக் குரலில் ஏழை கேட்கும் காலம் மாறிவருகிறது என்பதைக் காட்டுவது போல, ஒவ்வொரு ஆண்டும் உலகத் திருநாளாகிய மே தினம், வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

பாட்டாளிகளின் நாடெனக் கருதப்படும் ருசியா முதல் முதலாளிகளின் கோட்டமென எண்ணப்படும் அமெரிக்காவரையில், எங்கெங்கு உழைப்பாளிகள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் மே முதல் நாள் சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது.

ருசியா, சீனம், யுகோ முதலிய நாடுகளில் அந்நாள், ஒரு எழுச்சி நாள்—இன்பம் பொங்கும் திருநாள் எனக் கருதப்படுகிறது. அரசாங்கமே, தொழிலாளர்தம் நலனில் அக்கரையைக் காட்டும்வகையில் இவ்விழாவினை நடத்துகிறது. இந்த மாண்பு இங்கே இல்லை. சர்வோதயம் — சதானந்தம்—சாந்த மார்க்கம் பேசும் நேரு பண்டிதரின் நாட்டிலே அந்தப் பேறு கிடைக்கவில்லை. எனினும், நாட்டின் நானா பாகங்களிலுமுள்ள மக்கள், மே தினத்தை, வேலை செய்த நேரம் போக மீதி நேரத்தில், தம்முடைய சபதம் எடுக்கும் விழாவாகக் கொண்டாடியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகமட்டுமல்ல முற்போக்குக் கட்சிகள் அனைத்தும் தத்தம் சக்திக்கேற்ற வகையில் கொண்டாடியுள்ளன.

சிறு தீவு இலங்கை! அங்கே, ஆட்சிப் பொறுப்பேற்ற புதியவர்களால், மே தின விடுமுறை அளிக்கப்பட்டிருக்கிறது, உழைப்பாளர்களுக்கு. ஆனால், மாபெரும் பூபாகமான இங்கே, அந்தப் பண்பு வளரவில்லை. அமாவாசையிலிருந்து அநாவசியமான வீண் விழாக்களுக்கு விரயம் செய்யப்படும் விடுமுறைகள் ஏராளம்! ஏராளம்!! எனினும், உலகம் ஒப்புக்கொண்ட ஒரு உரிமைத் திருநாளுக்கு, விடுமுறை கிடையாது.

மனிதனை மாடெனக் கருதி, அவன் உழைக்கப் பிறந்தவனே தவிர வாழப் பிறந்தவன் அல்ல எனும் வரட்டுச் சித்தாந்தத்துக்கு வேட்டு வைத்தனர், அகில உலகமும் மிரளும் ஐசுவ்ரிய நாடான அமெரிக்காவிலுள்ள சிகாகோ நகரில்! 1886-மே முதல் நாள் பாட்டாளிகளின் உரிமைக் குரல், ஒலித்தது—"எட்டு மணி நேரவேலைகொடு! எங்களுககும் ஓய்வு வேண்டும்!!" என்பதாக. அன்று நடைபெற்ற பிரமாண்டமான வேலை நிறுத்தத்தை அடக்க போலீஸ் வந்தது. எரிச்சல்கொண்ட யாரோ, ஒரு வெடிகுண்டைப் போலீஸ் படையினர்மீது வீச, அதன்விளைவாக நான்கு தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு 1887-நவம்பர் 11-ந்தேதி பட்டப்பகலில் தூக்கிலிடப்பட்டனர்.

ஐயகோ! இதுவா, நீதி? —என்றான் உலகப்பன்.

கனலும் புனலும் வழிந்தது கண்களில்! ஏழையின் இதயம், தன்னைப்பற்றி எண்ணிப் பார்க்கலாயிற்று!!

1889-ல் பாரிசில் கூடிய சர்வதேச தொழிலாளர்கள் மாநாட்டில் இந்த அக்கிரமம் குறித்துக் கண்டித்துப் பேசப்பட்டது. எட்டு மணி நேரம் வேலைகொடு! என்று முதன் முதலில் கோரிக்கை கிளப்பப்பட்ட, மே முதல் நாளை, உலகத் தொழிலாளர் அனைவரும் கொண்டாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டு, அன்று முதல் கொண்டாடப்பட்டும் வருகிறது. ருசியா, சீனா போன்ற நாடுகளில் இத் தினத்தைத் தமது சக தொழிலாளர்களின் உரிமைத் திருநாளாகப் பெரும் அளவில் கொண்டாடுகிறார்கள்! இங்குள்ள நாமோ, அவர்களைப்போல உரிமைகளைப் பெறுவதற்கு உணர்ச்சியூட்டும் எழுச்சி நாளாகக் கருதி—ஊர்வலம்—பொதுக் கூட்டம் முதலியவைகள்மூலம் கொண்டாடுகிறோம்! சோஷியலிசம் பேசும் அரசால், இந்த நாளைத் தனது தேசிய விடுமுறை நாளாக்கிக் கொள்ள முடியவில்லை. டாடாவும் பிர்லாவும் அந்தளவுக்கு ஆட்டிப்படைக்கிறார்கள் போலும் ஆளவந்தார்களை!!

நடுக்கடல்! காரிருள்! கலமோ, தவிக்கிறது—இதுதான், நிலை.

எப்படியாவது தப்பித் தவறி துயரக்கடலைத் தாண்டலாம் என்று நினைத்தாலோ, திடீர் திடீரென்று சூறாவளிகள் வேறு சுழன்றடிக்கின்றன!

இரண்டொரு திங்களாக, பண்டங்களின் விலைவாசிகள் 'விஷம்'போல் ஏறுவதால் அல்லற் படுவோர் கொஞ்சமா? அப்ப்ப்ப, எண்ணவே முடியவில்லை!

இப்படிப்பட்ட நெருக்கடிகள், இன்றுள்ள பொருளாதார அமைப்பில் ஏற்படும் என்பதாலேயே நாம் சமதர்மச் சமூகம் அமைக்கப்பட வேண்டும் என்று கூறுகிறோம்.

அச்சமூகம் அமையும் நாள், நமது இன்பத் திருநாளாகும்!

அந்நாள் வரும் வரையில், நம்மைப்போல் உழைத்து வாழும் பாட்டாளி மக்களுக்காகப் பாடுபடுவோம், பாடுபடுவோம் என்று பன்முறை உறுதி கூறுகிறோம். வளர்க புதுயுகம்! வாழ்க உழைப்பாளர் உலகு!! ★

# திராவிடத்தின் மின்சக்தி

—[ புவியரசு ]—

எத்தனை வகை கனிப்பொருள்கள் கிட்டித்தான் என்ன பயன்? அவற்றைப் பயன்படுத்தி கனரகத் தொழிலமைக்க மின்சக்தி வேண்டாமா? என்று வினு எழுப்புகிருர்கள்.

தென்னகத்து மாநிலங்கள் உற்பத்தி செய்யும் மின்விசையைவிட இவர்கள் கோடிக் கணக்கில் ருபாய்களைக் கொட்டி தொழிலமைத்த வடநாட்டு மாநிலங்கள் எந்த அளவு மின் சக்தியை உற்பத்தி செய்கின்றன என்பதைப் பார்ப்போம்.

மத்திய ஆட்சி உற்பத்தித் துறையமைச்சர் திரு. கே. சி. ரெட்டி கூறுகிருர், 'சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலையா? அதற்கு 3 ›00கிலோவாட்கள் மின் சக்தி வேணடுமே' என்று.

அவர்தம் பார்வைக்கு தென்னகம் உற்பத்தி செய்யும், மின் விசை அளவின் பட்டியலைப் படைக்கிரேம்:—

| மாநிலம் | திட்டத்தின் பெயர் | மின் சக்தி அளவு |
|---|---|---|
| சென்னை 1 | 'பைக்ரா' நீர் மின்விசை முதல் திட்டம் | 40,000 கிவா |
| 2 | " இரண்டாவது திட்டம் | 27,200 " |
| 3 | மதுரை 'கிரிட்' திட்டம் | 12,000 " |
| 4 | மேட்டூர் நீர் மின் விசைத் திட்டம் | 30,000 " |
| 5 | பாபனசம்மும்முனைநீர் மின்விசைதிட்டம் | 21,750 " |
| 6 | " இரண்டாவது திட்டம் | 7000 " |
| 7 | சென்னை 'கிரிட்' திட்டம் | 38500 " |
| 8 | மோயார் மின்விசைத் திட்டம் | 24000 " |
| ஆந்திரா 1 | மெக்குண்ட் நீர் மின்விசைத் திட்டம்— (ஒரிசாவின் பங்கு நீங்கலாக) | 75,000 " |
| 2 | துங்கபத்ரா நீர் மின்விசைத் திட்டம் | 170,000 " |
| 3 | விஜயவாடா திட்டம் | 6000 " |
| 4 | விசாகை " | 3750 " |
| 5 | நெல்லூர் " | 5000 " |
| மைசூர் 1 | 'ஜோக்' நீர் மின்விசைத் திட்டம் | 12000 " |
| 2 | சிவசமுத்திரம் " | 42000 " |
| 3 | 'சிம்ஷா' | 17,200 " |
| 4 | இவையன்றி பூர்வாங்க வேலைகள் முடிந்துமின்விசை உற்பத்திசெய்யத் தயாராயுள்ள பத்ரா மின் விசைத் திட்டம் | 14,000 " |
| 5 | ஹொன்னிமாரடு' மின்விசைத் திட்டம் | 3,40,000 " |
| திரு.கொ.1 | பள்ளிவாசல் நீர் மின்விசைத் திட்டம் | 3,75,000 " |
| 2 | திருவனந்தபுரம் 'தெர்மல்' (டீசல்) | 1,146 " |
| 3 | திருச்சூர் மின்விசைத் திட்டம் | 1,100 " |
| 4 | மற்றும் அமைப்பு வேலைகள் முடிந்து மின்விசை உற்பத்தி செய்யும் நிலையில் உள்ள பள்ளிவாசல் இரண்டாம் திட்டம், பரிங்கல்குத்து நீர் மின் விசைத் திட்டம் ஆகியவை மூலம் கிடைக்கவிருக்கும் மின் சக்தி 56 கோடி யூனிட்டுகள் ஆகும். அதாவது. | 109500 " |
| | மொத்தம்... | 13,72,146கிவா |

முகப்பில்

## காவலன் சிறைப்படும் காட்சி

முடிதரித்த மன்னன், கிளிக் கூண்டில்!

ஆடையும் அணியும், அவனை அரசன் என்று எடுத்துக் காட்டுகிறது; ஆனுல் கூண்டுக்குள் அவன் அமர்ந்திருக்கும் நிலை, மன்னன் சிறைப்படுத்தப்பட்டு இருக்கிருன் என்பதை விளக்குகிறது.

இது ஓர் கேலிச்சித்திரம்! பிரஞ்சுப் புரட்சி பற்றிய விளக்கமளிக்கும் ஓவியம்.

புரட்சியின்போதிருந்த பிரஞ்சு நாட்டு மன்னன் லூயி, முதலில் மக்களை மதியாதமதோன்மத்தனுக இருந்து வந்தான்.

கொடுங்கோலாட்சியில் சிக்கிய மக்கள், துவக்கத்தில் அஞ்சிக் கிடந்தனர்.

மன்னனிடம் படை இருக்கிறது சிறை இருக்கிறது—என்று மக்கள் அஞ்சினர்.

அந்த அச்சத்துக்கு ஆட்பட்ட மக்களை ஆட்டிப்படைக்க முடிந்தது கொடுங்கோலனுக்குத் துணை நின்ற கொடியவர்களால்.

அடக்குமுறை, மக்களைத் துன்புறுத்திற்று என்ருலும் அவர்கட்கு அஃதே ஆசானுகவுமாகிவிட்டது. படவேண்டியதனைத்தும் பட்டாகிவிட்டது, இனிப் பயப்பட என்ன இருக்கிறது என்றெண்ணிய மக்கள், பிறகு பயத்தை விரட்டி அடித்தனர்.

அடங்கிக்கிடந்த மக்கள் அச்சத்தை விட்டொழித்த நிலை பெற்றது கண்ட காவலன் கிலி கொள்ளத் தொடங்கினுன்.

காவலன் கிலிகொள்கிருன் என்பது தெரிந்ததும், மக்கள் துணிவு பெறலாயினர்.

துணிவு பெற்ற மக்களின் எழுச்சி, புரட்சியாக வடிவமெடுத்தது.

மக்களின் கோபத்தினின்றும் தப்பி ஓடி, வெளிநாடு சென்று பெரும்படை திரட்டிக்கொண்டு வந்து, மக்களை அடக்க ஓர் திட்டம் உருவாயிற்று, மன்னன் மந்திராலோசனை மண்டபத்தில்.

மக்கள் அறியாமல் வெளிஏற முயற்சித்தான் மன்னன், பிடிபட்டான், மக்கள் மன்னனைக் காவலில் வைத்துக் கண்காணித்து வந்தனர்.

மக்களுக்குச் சகல உரிமைகளையும் வழங்கிவிட்டு மக்களின் சம்மதம் பெற்ற மன்னனுக கொலுவிருக்கும்படி, திட்டம் தரப்பட்டது.

ஏற்றுக்கொள்ள இணங்கினுன் மன்னன்.

அந்த நிலையைச் சித்தரிக்கும் கேலிப்படம், முகப்பில் இருப்பது.

# ஊர்வலம்

['ஞானக்கண்' பேட்டி]

வெகு நாட்களாக எனக்கோர் ஆசை! யுகோஸ்லேவியத் தலைவர் டிட்டோ இருக்கிறாரே அவரைப் பேட்டிகாண வேண்டுமென்று! சென்றசில நாட்களுக்கு முன்பு, ரஷ்யாவிலிருந்த 'கம்யூனிஸ்டு அகிலம்' கலைக்கப்பட்டு விட்டதாகச் செய்தி வந்ததல்லவா? அந்த அகிலத்துக்குக் கட்டுப்பட்டிருக்கமாட்டேன் என்று மறுத்து வெளியில் வந்து 'மாஸ்கோ'இல்லாமலும்பொதுவுடைமைக் கொள்கைகளை அமுல் நடத்தமுடியும் என்று நடத்திக் காட்டியவரல்லவா, அதனால் இச்சந்தர்ப்பத்தில் அவரைப் 'பேட்டி' காணக் கிளம்பினேன். டிட்டோ, ஒரே ஆனந்தமயமாக இருந்தார்!

"என்ன மார்ஷல் நலம்தானே?" என்றேன், அவரைச் சந்தித்ததும்.

"ஓ! நீயா? தமிழ் நாட்டு ஆளா! சபாஷ், நான் உங்கள் ஊருக்கு வந்தபோது மிகவும் ஆனந்தமடைந்தேன். எப்படி நலம்?" என்றார்.

'மிக்க நலம் மார்ஷல்; ஆனந்தமாகயிருக்கிறீர்களே என்ன காரணம்?" என்றேன்.

"ஆனந்தமிருக்காதா, தம்பி! ரஷ்ய துணைப் பிரதமர் மிகோயான் விட்ட அறிக்கையைக் கவனித்தாயல்லவா?"

"கம்யூனிஸ்டு அகிலத்தைக் கலைப்பதாக அறிக்கை விட்டாரே ........"

"ஆம், அதுதான்! முதன் முதலில் அந்த 'அகிலம் கூடாது—ஒவ்வொரு நாடும் மாஸ்கோவின் கட்டளைப்படியே நடப்பதென்பது இயலாது — அவையவைகளுக்குள்ள பிரச்னைகளையொட்டி கொள்கைகளை வரையறுத்துக் கொள்வதுதான் நியாயம்—என்று நான் சொன்னேன். தலையாட்டித் தம்பிரானாக இருக்க முடியாது என்றேன். ஏசினார்கள்! பேசினார்கள்!! இப்போது நான் சொன்னபடியே செய்யவேண்டுமென்று முன்வந்து அகிலத்தைக் கலைத்திருக்கிறார்கள். என் கோரிக்கை நிறைவேறும்போது ஆனந்தம் எழாதா?"

அங்கிருந்து கிளம்பினேன், அப்படியே மாஸ்கோவையும் பார்த்துவிட்டு வரலாமென்று.

* * *

அடடா! எப்படி அலங்காரம் செய்திருந்தார்கள் தெரியுமா? எங்கு பார்த்தாலும் தலைவர்கள் படங்கள். மே தின விழாவையொட்டி யாவருக்கும விடுமுறை என்பதால் மாஸ்கோவின் வீதிகளெல்லாம் கூட்டம் கூட்டமாக இருந்தது. குதூகலத்தோடு ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் நடமாடிக்கொண்டிருந்தார்கள். இந்த வைபவங்களைக் கண்டு மனங் குளிர்ந்த எனக்குத் திடீரென ஒரு நினைவுவந்தது. பார்த்தேன்—சுற்றுமுற்றும் பார்த்தேன். வேறு எதுவுமில்லை—தலைவர்களின் படங்களில் ஸ்டாலின் படம் வைத்திருக்கிறதா என்றுதான். காணவில்லை; எனக்கு என்னமோபோலிருந்தது. ஏன் தெரியுமா? என் நண்பர் காம்ரேட் கழுகாசலம், தன்னுடைய குழந்தைகளுக்கு லெனின், ஸ்டாலின், என்றுதான் பெயர் வைத்திருக்கிறார்! மாஸ்கோமீதும், ரஷ்யா மீதும் அவருக்கு அவ்வளவு ஆர்வம். மாஸ்கோவில் இடி இடித்தால் மன்னார்குடியில் நிச்சயம் மழை பொழியும் என்று வாதிப்பார்! அவர் இப்போது என்ன செய்வார் — என்கிற யோசனையில் திகைத்து நின்றபோது, பெரும் கை தட்டல் சப்தம் கேட்டது. இங்கிலாந்தின் 'விஜயத்தை' முடித்துவிட்டு வந்த ருசியப் பிரதமர்புல்கானினும், குருசேவும் காரில் போய்க்கொண்டிருந்தார்கள். வந்ததுதான் வந்தோம், அவர்களையும் போய்ப் பார்த்துவிட்டு வருவோம் என்று அவர்கள் பின்னாலேயே கிளம்பினேன். நான்தான் ஞானக்கண்ணாயிற்றே—அதனால், அவர்களுக்கு முன்னதாகவே மாளிகைக்குச் சென்றுவிட்டேன். என்னைக் கண்டதும், புல்கானின் திரும்பிப் பார்த்துவிட்டு உள்ளே போய்விட்டார். குருசேவ், அப்படிச் செய்யவில்லை.

"அடடே! நீயா? உங்கள் ஊர் இளநீர் சுகமா! மாம்பழம் சுகமா! எப்படி வெயில்...?" என்றார்.

'வெயில் அடித்துக்கொண்டேயிருந்தது. திடீரென்று, மழையும் நடுவில் பெய்து அமர்க்களப்படுத்தி விட்டது. நிரந்தரமான நிலையில்லை, எதற்கும்" என்றேன். கடைசி வார்த்தையை நான் கொஞ்சம் மெதுவாகச் சொல்லவே, அவர்,

"என்ன முணுமுணுக்கிறாய்! சொல்லு..." என்று அவருடைய கையால் என் தோளைத் தொட்டார். அப்பா, என்ன வலுவான கரம் மெதுவாக அதை எடுத்துவிட்டுக்கொண்டே, "நிரந்தரமான நிலையில்லை எதற்கும்" என்று சொன்னேன் என்றேன்.

எதைப்பற்றிச் சொல்லுகிறாய்?'

உங்கள் இங்கிலாந்துப் பயணம் பற்றித்தான் சொல்லுகிறேன். எலியும் பூனையும்போல இருந்ததோர் காலம்! தோளோடு தோள் போட்டு குலவுவதோர் காலம்! இல்லையா? இங்கிலாந்து, போன்ற நாடுகளுக்கு முன்பெல்லாம் வருவீர்களா? இப்போது வருகிறீர்கள்! காலம் மாறமாறக் கருத்துக்களும் மாறத்தானே செய்யும், அதனால்தான், எதுவும் நிரந்தரமானதாகயில்லை,' என்றேன்.

"பிறகென்ன தம்பி! வளரும் உலகில் காலஓட்டத்தை அனுசரித்துத்தானே நடந்துகொள்ள வேண்டும்" என்றார்.

"அதனால்தான், செக்கோசுலோவேகியா, ருமேனியா, அங்கேரி, போலந்து, பல்கேரியா, பிரான்சு, இத்தாலி முதலிய எட்டு நாடுகள் அடங்கியிருந்த 'கோமின்பார்ம்' எனும் கம்யூனிஸ்டு அகிலத்தைக் கலைத்துவிட்டீர்களோ?" என்றேன்.

தென்னகத்து மேடைதோறும்
வெற்றிமுரசு கொட்டி வரும்
கொள்கை விளக்க ஓவியம்
கலைஞர் மு. கருணாநிதி
எழுதிய
மணிமகுடம்
மாநில மாநாட்டில் கிடைக்கும்
முத்துவேல் பதிப்பகம்,
திருச்சி,

"ஆமாம்! மாஸ்கோதான் ஆங்காங்குமுள்ள கம்யூனிஸ்டுகளை வைத்துக்கொண்டு ஆட்டிப் படைக்கிறது என்று அமெரிக்கா போன்ற நாடுகள் சொல்லிவருகின்றனவல்லவா? ஏன் நமக்கு இந்தக் கெட்டபெயர்! அந்தந்த நாட்டுக் கேற்றபடி ஆங்காங்குள்ள கம்யூனிஸ்டுகள் பணியாற்றவேண்டும் என்று தெளிவாகச் சொல்லிவிட்டோம்?"

"ஆமாம் ஆமாம், நானும் பார்த்தேன" என்று சொல்லிவிட்டு, பாலக்காடு நோக்கிக் கிளம்பினேன்.

✱

அகில இந்திய கம்யூனிஸ்டு மகாநாடு பாலக்காட்டில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. பலத்த விவாதங்கள் ஒருபக்கம். யாரையும் நுழையவிடவில்லை. முன்னாள் கம்யூனிஸ்டுக் கட்சிப் பொதுக் காரியதரிசியான பி. சி. ஜோஷி காரசாரமாக விவாதித்துக்கொண்டிருந்ததாகவும் தற்போனைதய பொதுக் காரியதரிசி அஜாய்குமார் கோஷ் பிறகு அவருக்குப் பதிலளித்ததாகவும் சொன்னார்கள். "காங்கிரசுடைய வேலைமுறைகளில் நாமும் ஒத்துழைக்கலாம். அகில உலக ரீதியில் மாஸ்கோவுக்கும் டில்லிக்கும் நல்ல உறவு ஏற்பட்டிருப்பதால் நாமும் ஒத்து போகலாம்" என்பது அஜாய்குமார் வாதமாம். அதுமுடியுமா, என்பது ஜோஷியின் கேள்வியாம். கடைசியில் அஜாயின் கொள்கையையே எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். வெளிநாட்டுக் கொள்கையில் டில்லிக்கு ஆதரவு காட்டுவதென்றும் உள்நாட்டுக் கொள்கையில் காங்கிரசின் போக்கை எதிர்ப்பது என்றும் முடிவாம்! அதைக் கேட்டுக்கொண்டு வெளியேவந்து சுற்றிப் பார்த்தேன். ஏற்பாடுகள் மிகப் பிரமாதமாயிருந்தன. இந்திய சர்க்காரின் செய்தி இலாகாவினராம், அவர்கள் படம்பிடித்துக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள் மாநாட்டு நிகழ்ச்சிகளை. இந்திய சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டப் பிரச்சார 'ஸ்டாலும்' இருப்பதாகப் பத்திரிகைளில் படித்த செய்தி கவனத்துக்கு வரவே, திரும்பினேன். நமது தோழர் பி. இராமமூர்த்தியைக் கண்டேன். என்னைப் பார்த்ததும், 'நீ எப்படி வந்தாய்?' என்றார். "நான் வந்த விபரத்தைப் பிறகு தெரிவிக்கிறேன். இந்திய சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டம் பற்றி பிரச்சார ஸ்டால் வைக்கப்பட்டிருக்கிறதாமே. அது எங்கே?"

"ஏன் கேட்கிறாய்?"

"அதற்கு எதிரில் ஒரு கம்பு நாட்டி இந்தப் போர்டை வைக்க விரும்புகிறேன்" என்றேன்.

"என்ன போர்டு?" என்றார்.

**இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ரு 4300 கோடியிலிருந்து ரு 4800 கோடிக்கு அதிகரிக்கப்பட்டும் நமது இராஜ்யத்துக்கு ரூ 170 கோடியே கிடைக்கிறது. இதனால் நாம் போட்ட பல திட்டங்கள் கோவிந்தா ஆகிவிட்டது"—**

என்று எழுதிவைத்திருந்த போர்டை எடுத்து நீட்டினேன்."

"இது...!" என்று இழுத்தாற் போல் கேட்டார்.

"நீங்கள் சட்டசபையில் ஐந்தாண்டுத் திட்டத்தில் தெற்குக்கு இழைக்கப்படும் அநீதி குறித்து கண்டித்துப் பேசியது, இது. இங்கு வைக்கப்பட்டிருந்தால், நன்றாயிருக்குமல்லவா?

"கூடாது! கூடாது!"

"ஏன்? ஏன்?"

"பிரிவினை விரும்பியதுபோலாகும். அகில இந்திய ஆட்சியைக் கண்டித்துப் பேசியதாக என் தலைவர்கள் எல்லாம் தெரிந்துகொள்வார்கள்" என்றார்.

"அதனால் என்ன? நமது இராஜ்யம் சீர்கேடு அடையக்கூடாதென்றுதானே பேசினீர்கள்" என்றேன்.

"நமது இராஜ்யம் என்று நாங்கள் சொல்லுவது இந்தியா பூராவையும்தான். அப்படி இருக்கையில்...'

"பயப்படாதீர்கள்! குருசேவே சொல்லிவிட்டார், அந்தந்த நாட்டுக் கேற்றபடி, ஆங்காங்குள்ள கம்யூனிஸ்டுகள் பணியாற்ற வேண்டுமென்று. அதன்படி, செய்வதாக உங்கள் தலைவர்களிடம் தெரிவித்துவிடுவோம். நம்முடையகாரியங்களை, நாமே ஒன்று கூடி உட்கார்ந்து கவனித்துக் கொள்வோம். உறவுக்கு இமயம்! வாழ்வதற்கு நம் நாடு!!"-என்றேன்.

அவரோ, என்னை விடவில்லை. பதிலும் கூறவில்லை. கொடு போர்டை! கொடு போர்டை!" என்று கூவிக்கொண்டே துரத்தினார். ஓட்டமாகத் தப்பித்துக் கொண்டு, இங்கு வந்துவிட்டேன்.

★



★

11ம் பக்கத்தில் வெளிவந்துள்ள கட்டுரையில் குறிப்பிடப்படும்

**ஜான் பிரான்**

அவனுடைய காதலி

**ஈவா**

★



உரையாடல்

# கடவுளர் உலகில்

தேவி:- என்ன பிராணநாதா! இன்று தங்கள் முகத்தில் என்றும் இல்லாததோர், 'திவ்ய தேஜஸ்' தெரிகிறது...

பாடலேசர்:- தேவி! வரவர உனக்குக் குறும்புத்தனம் அதிகமாகிக்கொண்டு வருகிறது. என் முகத்திலே 'தேஜஸ்' தெரிகிறது, காரணம் என்ன என்று கேட்கிருயே! இன்று மட்டுந்தானு, என் முகத்தில் தேஜஸ் தெரிகிறது. அப்படியானல், இதற்கு முன்பெல்லாம் என் முகத்தில் அசடு வழிந்துகொண்டா இருந்தது?

தேவி:- இதென்ன பிராணபதே! வீணுக வம்புக்கு நிற்கிறீர். உமது முகம் அசடு வழிகிறது என்று நான் எப்போதாவது சொன்னேனு. கேவ்லம்; பூலோகத்துப் பெண்டுகள்கூட, தங்கள் கணவன்மார் முகம் அவலட்சணமாக இருப்பினும், வெளியே சொல்லமாட்டார்களே. சொல்லுவது தங்களுக்குத்தான் கேவலம் என்று எண்ணுவார்களே. அவர்களே அப்படி இருக்கும்போது, அண்டசராசரத்துக்கும் ஆதிநாதனை தங்களை நாயகனுகக் கொண்ட அடியாள் அவ்விதமெல்லாம் பேசுவேனு? எப்போதும் தங்கள் முகம் இலாவண்யமானதுதான்; இன்று அலாதியான அழகுடன் இருக்கிறது, அதனல் கேட்டேன, தவருக எண்ணிக் கோபம் கொள்ளாதீர்.

பாடலேசர்:- அவசரப்பட்டுவிட்டேன், தேவி; பிழை பொறுத்திடு, எப்போதும் நான் சற்று முன்கோபக்காரனல்லவா...

தேவி:- ஸ்வாமீ! நான் கேட்டதற்கு ......?

பாடலேசர்:- அன்புருவே! அறச்செல்வீ! இன்று, என்னைத் தரிசித்துவிட்டு, இப்போது ஒரு 'பக்தர்' சென்ருரே, கண்டாயோ?......

தேவி;- யார்? கருத்த நிறமும்...... குள்ளமான......

பாடலேசர்:- ஆமாம்...கருப்புநிறக் கண்ணாடிகூட அணிந்து கொண்டிருந்தாரே...

தேவி:- ஆமாம்... ஆமாம்...யாரோ கனவான்போலத் தெரிந்தது ......

பாடலேசர்:- கனவானேதான் கண்ணே! 'கனம்' என்ற பட்டப் பெயரே சட்டப்படி அவருக்கு உண்டு, 'கனம்' S. S. இராமசாமி படையாச்சி எனும் திருநாமம் கொண்டவர்; சீமான்; நூறு விவசாயிகளுக்கு வேலை தரவல்ல அளவுக்கு நிலம் படைத்த பூமான்; சென்னை இராஜ்யத்துக்கு அமைச்சராக அமர்ந்திருக்கும் பாக்கியவான்; நமது பக்தன்:

தேவி:- மெத்தச் சந்தோஷம், நாதா!......

பாடலேசர்:- நம்மை, மக்கள் சரியாக மதிப்பதில்லை, பஜிப்பதில்லை, பூஜிப்பதில்லை, அப்படி எப்போதேனும் நம்மைத் தரிசித்தாலும், ஐயனே! போதும் நாங்கள் படும் துயரம்! படமுடியாதினித் துயரம்! உமது பாதார விந்தத்தில் சேர்த்துக்கொள்ளும்'—என்று அழுது தொலைக்கிருர்கள். இப்போது வந்து பஜித்தாரே அமைச்சர், அவர் அவ்விதமெல்லாம் அழவில்லை; தொழுதுமகிழ்ந்தார், மகிழ்ச்சியுடன் தொழுதார்; தொழுது எம்மை மகிழ்வித்தார்.

தேவி:- இதிலே என்ன இறைவா! பெருமைப்படக் காரணமிருக்கிறது? மன்னாதி மன்னர்களும் தங்கள் முன் மண்டியிடுவதுதானே, தொன்று தொட்டு இருந்து வருகிற முறை......

பாடலேசர்:- ஆமாம் ஆருயிரே! ஆனல் இந்த அமைச்சர், முன்பு, நாதனுக்கு உருவம் ஏது, நாயகிதான் ஏதற்கு? என்று ஏதேதோ கேட்டு நாத்திகம் பேசும் "நாயக்கர்" கூட்டத்தில் இருந்துவந்தார் —இப்போது 'கனம்' ஆனர், பக்தனும் ஆகிவிட்டார்! நம்மை மறந்து, நிந்தித்துக் கிடந்தவர் வந்தனை வழிபாடு செய்திட வந்தது கண்டதால், எனக்கு மகிழ்ச்சி...மேலும...

**அமைச்சர் பதவி தனக்குக் கிடைத்ததற்குக் காரணமே என் அருள்தான் என்று உள்ளம் உருகி உரைத்திருக்கிருன் அந்த உத்தமன். பாடலேசரை நான் பணிந்து வருபவன்; அவர் அருளாலேயே பட்டம் பதவி பெற்றேன் என்று பல்லிளியக் கூறினன் அந்தப் பரம பக்தன்......**

**[ பாதகன்!**

**படுபாதகன்!**

**எத்தன்!**

**எத்தன்! — என்ற குரல் கேட்டு, தேவி திகிலுற்று, நாதனை**

அணைத்துக்கொள்கிறர்; பாடலேசர், பயமேன் கொள்கிருய், பாவாய்! திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளின் தேவியாம் உனக்கும் திகில் பிறக்கலாமோ! அடக்கு, அடக்கு, அச்சத்தை அடக்கு!—என்று கூறுகிருர். உள்ளே ஆக்ரோஷத்துடன் அனுமார் பிரவேசிக்கிருர்.]

பாடலேசர்:- ஓஹோ! அனுமனே! ஆர்ப்பரிப்புக்குக் காரணம், புரிந்துவிட்டது. அனும! என்ன காரணமாக, கடுங் கோபம் கொண்டு காணப் படுகிருய்......?

அனுமன்:- என் கோபம் கிடக்கட்டும்.........இப்போது நீர், பக்தன் என்று, அமைச்சர் குறித்துத்தானே பேசிப் பூரித்துக்கிடந்தீர்?

பாடலேசர்:- ஆம், அனும! ஆம்!

அனுமன்:- என்னகூறித்தொழுது மகிழ்ந்தார் அந்த அமைச்சர்?

பாடலேசர்:- தனக்கு அமைச்சர் பதவி கிடைத்தது என் அருளினுல் என்று கூறித் தொழுது மகிழ்ந்தனன் அத் தூயவன்.

அனுமன்:- உமது அருளால் அமைச்சர் பதவி கிட்டிற்று என்று கூறவே, நீர் பூரித்துப் போனீர், புகழுரையை வாரி வீசுகிறீர், அந்த அமைச்சர் மீது. ஈசா! உண்மை உமக் கெங்கே தெரிகிறது? தெரிந் தால், அறிந்துகொள்வீர், அந்த அமைச்சர், பக்தர் அல்ல, உம்மை ஏய்த்திட்ட எத்தர் என்பதை......

பாடலேசர்:- சத்தத்தைக் குறைத் துக்கொள் அனும! ஏற் கனவே திகில்கொண்ட நிலையில் தேவி இருப்பதை அறிந்து, பேசு......

அனுமன்:- முடியவில்லை, முப்புர மெரித்தோனே, முயன்றுலும் முடியவில்லை. உமது அருளால், பதவி கிடைத்தது என்று அந்த அமைச்சர் சொன்னது, எனக்கு இழைக்கப்பட்ட மாபெருந் துரோகம்—அந்த துரோகத்தை எண்ணும்போது, பாம்பாபரணு! எனக்கு உள்ளம் எரிமலையாகிறது-சஞ்சீவி மலையைப் பறித்தெடுத்தது போல, எதையேனும் தூக்கி எறியலாம்போல் தோன்று கிறது......

பாடலேசர்:- பதருமல் பேசு வாயு புத்ரா! கேவலம், மானிடர் போலக் கோபத்துக்கு இட மளிக்கலாமா........

அனுமன்:- மனிதர் உலகிலே மகாதேவா! இப்படிப்பட்ட துரோகம் தாங்கிக்கொள்ள மாட்டார்கள். நாம்தான், எதையும் தாங்கிக்கொள்கி ரேம்; அதனுலேயே நமது நிலை, இழிந்தும்விட்டது...

பாடலேசர்:- பொதுத்தத்துவம் கிடக்கட்டும்....இப்போதுள்ள பிரச்சினைபற்றிப் பேசு......

அனுமன்:- தங்கள் அருளால் பதவி கிடைத்தது என்று பேசி, தங்களை மகிழ்வித்து தங்களிடமிருந்து, வாழ்த்து தலைப் பெற்ற அந்த அமைச்சர், பதவி கிடைத்தவுடன், ஓடோடி வந்து, எனக்குப் பூஜை பலமாகச் செய்து, பாதம் தொழுது, பலரறிய, பாரறிய, பக்திப் பரவசமேலிட் டவராகி, என்ன சொன்னுர் தெரியுமா...?

பாடலேசர்:- என்ன சொன்னுர்?

அனுமன்:- அனுமனே! இராம தூதனே! உன் அருளால் தான் நான் அமைச்சனுனேன் ...என்று சொல்லி கன்னத் தில் போட்டுக்கொண்டார்... நான் பூரித்துப்போனேன்

பாடலேசர்:- இதென்ன விந்தை அனுமனே! உன் அருளால் அமைச்சர் பதவி கிடைத்த தாகவா சொன்னுர், அந்த அமைச்சர்...?

அனுமன்:- ஆமாம் ஐயனே! ஆதாரம் காட்டமுடியும் என்னுல். தினமணி—சுதேசமித்திரன்.... இப்படிப்பட்ட ஏடுகளில், பெரிய பெரிய தலைப்புகள் கொடுத்து,இந்தச் செய்தியை வெளியிட்டார்கள்.

பாடலேசர்:- இதென்ன விபரீதமாக இருக்கிறது? இப்போது எவ்வளவு பக்திரசத்துடன் என்னைத் தொழுது, பாடலேசர் பாதம் பணிபவன் நான்—நெடுங்காலமாக ஈசனைத் தொழுது வருபவன்; அதன் பலனுகத்தான் எனக்கு அமைச்சர் பதவி கிடைத்தது என்று தெளிவாகச் சொல்லி விட்டுச் சென்றுரே!

அனுமன்:- என் அருளால்தான் பதவி கிடைத்தது என்று திட்டவட்டமாகச் சொன்னுர்.

பாடலேசர்:- என் அருள்தான் பதவி கிடைத்ததற்குக் காரணம் என்று என்னிடம் சொன்னுர்...

அனுமன்:- ஐயனே! அதிலேதான் அடங்கிக் கிடக்கிறது, பேருண்மை. இப்படிப்பட்டவர்கள், இச்சகம் பேசுவோர், நம்மை ஏமாளியாக்குகிருர்கள்; வேளைக்குத் தகுந்தபடியும் இடத்துக்கு ஏற்றவிதமாகவும் பேசி, நம்மை ஏய்க்கிருர்கள்...

பாடலேசர்:- பார்க்கப்போனுல், நீ சொல்லுவதுதான் உண்மையாகத் தெரிகிறது. நாம், ஏமாந்துதான் போகிறேம்...

அனுமன்:- அதுமட்டுமல்ல, ஈசா! ஏதோ நாம் ஒருவருக்கொருவர் நன்கு பழக்கமானவர்களாக இருப்பதால், ஒருவருக்கொருவர், இதன் காரணமாகப் பகைத்துக்கொள்ளாமலிருக்கிறேம்...சாமான்யமானவர்களுக்கிடையில் சண்டை அல்லவா மூண்டுவிடும்...?

பாடலேசர்:- சந்தேகமென்ன...

அனுமன்:- இத்தகையவர்களின் நோக்கமே, நமக்குள் போட்டியும் பொருமையும், பூசலும் மூட்டிவிடுவதுதான். இல்லையென்றுல், எதற்காக, அனுமனின் அருளால்தான் அமைச்சனுனேன் என்று என்னிடம் கூறிவிட்டு, ஈசன் அருளால் தான் பதவி கிடைத்தது என்று தங்களிடம் கூறவேண்டும்...

பாடலேசர்:- என் அருளால்தான் பதவி கிடைத்தது என்று அமைச்சர் சொன்னதும் கூடத்தானே தினமணியிலும் சுதேசமித்திரனிலும், வெளி வரும்.

அனுமன்:-ஆமாம்...எனக்கு எவ்வளவு மானக்குறைவு என்று எண்ணிப் பாருங்கள் மகாதேவா! படிப்பவர்கள் என்ன எண்ணிக்கொள்வார்கள். S.S. இராமசாமிப் படையாச்சிக்கு

மந்திரி வேலை கிடைத்ததற்குக் காரணம், அனுமாரின் அருள் என்று முன்பு எண்ணிக்கொண்டோமே, அது தவறு; இப்போது அமைச்சரே சொல்கிறார், அவருக்குப் பதவி கிடைத்ததற்குக் காரணம், பாடலேசர் அருளாம் ......என்று பேசிக்கொள்வார்களல்லவா?

தேவி:- அதனால் என்ன?

அனுமன்:- அம்மையே! அது என்ன, அவ்வளவு அலட்சியமாகப் பேசிவிட்டீர். அதனால் என்னவா? என் கௌரவம், அந்தஸ்து அதனாலே பாதிக்கப்படுகிறதே! அலட்சியப் படுத்தக்கூடிய விஷயமா அது...?

தேவி:- உமது கௌரவமும் அந்தஸ்தும், எப்படிப் பாழ்பட்டு விடும்...?

அனுமன்:- நல்ல கேள்வி கேட்டீர்களம்மா........தெற்குப் பக்க குளத்திலே செந்தாமரை பூத்திருக்கிறது, வடக்குப் பக்கத்துத் தடாகத்திலே இல்லை என்று தேவமாதர்கள் தெரிவித்தால், தாங்கள் எந்தத் தடாகம் செல்வீர்கள்?

தேவி:- செந்தாமரை பூத்த தெற்குப் பக்கத் தடாகத்துக்குத் தான்......

அனுமன்: வடக்குப் பக்கத்துத் தடாகம், தன் மதிப்பை இழந்துவிடுமல்லவா? அதே தான். பாடலேசர் அருளால் தான் பதவி கிடைத்தது என்று அமைச்சர் கூறிவிட்டதால், இனி, பூஜை பாடலேசருக்குச் செய்யத்தானே 'பக்தர்கள்' கிளம்புவர்! என் கதி என்ன ஆவது? என் சக்தி பற்றி இதுவரை நம்பிக் கொண்டிருந்தவர்களெல்லாம் இனி என்னைச் சிந்தமாட்டார்களே. என் கௌரவமும், அந்தஸ்தும் கெட்டுவிட்டது என்றுதானே பொருள். என் வாடிக்கைக்காரர் தொகை குறையுமே! நஷ்டம் அல்லவா அது...

தேவி:- அந்த முறையில் பார்க்கும் போது, நீர் சொல்வது, சரி தான்.

அனுமன்:- வேறு எந்த முறையில் பார்ப்பது, தேவியாரே!...... தெரியாமல்தான் கேட்கிறேன் சொல்லுங்கள், கேட்போம்...

பாடலேசர்:- தேவி! உனக்கேன் இந்த விவாதம்? அனுமனே! நான், வருத்தப்படுகிறேன், வேறென்ன செய்ய முடியும்...

அனுமன்:- உடனே ஒரு அறிக்கை வெளியிடுங்கள் ஈசா! பக்தி வேடமிட்டுக் கொண்டவர்களால், கடவுளர் இவ்விதமெல்லாம் ஏமாற்றப் படுகிறார்கள் என்பதை விளக்கியும், அமைச்சரின் போக்கை எடுத்துக் காட்டியும், ஒரு மறுப்பறிக்கை வெளியிடும்...

பாடலேசர்:- எந்தப் பத்திரிகை வெளியிடும்? எல்லாம் அமைச்சர்களின் தயவை அல்லவா தேடும்?

அனுமன்:- எல்லாம் அப்படி இல்லை... 'திராவிட நாடு' இதழுக்கு அனுப்புங்கள்.

பாடலேசர்:- செய்வோம்......நான் மட்டும் அறிக்கை அனுப்புவதற்குப் பதில், நாம் இருவரும் சேர்ந்து ஒரு கூட்டு அறிக்கை அனுப்புவோமே...

அனுமன்:- பொருத்தமான பேச்சு, முக்கண்ணா! அங்ஙனமே செய்வோம். ★

---

# பகுத்தறிவின் பாதை

[ம. கி. தசரதன்]

பன்னெடுங் காலத்திற்கு முன் மனிதன் வாழ்ந்த வாழ்க்கைக்கும் இன்று வாழும் வாழ்க்கைக்கும் எத்துணையோ மாறுபாடுகள் காணப்படுகின்றன. இனி வருங் காலத்திலும் மாறுபாடுகள் ஏற்பட்ட வண்ணமேதான் இருக்கும். அன்று மனிதன் காட்டில் விலங்கொடு விலங்காய் மரத்திலும் குகையிலும் வாழ்ந்து, பசித்தால் புசித்தும், நினைத்தால் ஆடியும் பாடியும், ஓய்ந்தால் உறங்கியும் தன்னுடைய வாழ்க்கையைக்கழித்துக்கொண்டிருந்தான். மனிதன் பெற்றிருந்த அறிவு பெருமளவு துணைபுரிய மனிதனின் வாழ்க்கை முறை மெல்லமெல்ல மாறத் தலைப்பட்டது. விலங்குகள்போல் பிறந்த மேனியனாக இருந்திருக்க வேண்டிய மனிதன், முதன் முதலில் இலைகளாலும், பட்டைகளாலும் தன் உடல் உறுப்புக்களை மறைத்துக் கொள்ளத் தலைப்பட்டு இன்று பெருமளவு மாற்றங்கள் ஏற்படுத்திக் கொண்டுள்ளான். இயற்கையில் நிகழும் பருவ மாறுதல்களின் ஆணைக்கெல்லாம் தலைவணங்கி மழை, பனி, வெயில் ஆகியவற்றை ஒன்றென்று எண்ணியவன் இன்று இவற்றுள்ளே வேறுபாடுகள் உணர்ந்து ஒதுங்கியும் மறைந்தும் வாழ்ந்து வருகின்றான். இவை எல்லாம் மனிதன் இதுநாள் வரை தன் அறிவின் துணைகொண்டு மெல்ல மெல்லச் செய்து வரும் பயணத்தின் தொடர்ச்சி ஆகும். புறத்தில் ஆன இவ்வகை வளர்ச்சிகளைப்போலவே அகத்திலும் பல மாறுபாடுகள் காணப்படுகின்றன,

தொடக்கத்தில் விலங்கு அனையனாக வாழ்ந்த மனிதன் தன் மனம்போன போக்கெல்லாம் போகத் தலைப்பட சமுதாயத்தில் பல இடையூறுகள் ஏற்பட்டிருக்கலாம். கிராமத்துச் சாலைகளிலும் சந்திகளிலும் வேறு வண்டிகள் இல்லாதபோது தனி வண்டி எப்படி வேண்டுமானாலும் போகலாம்; அதனால் ஆபத்து ஒன்றும் நேருவதில்லை. ஆனால் போக்குவரவு மிகுந்த நகரத்துச் சாலைகளிலும் சந்திகளிலும் அவ்வாறு தனி வண்டி ஒன்று போக முயன்றால் நேரும் விபத்துக்கள் பலவாக இருக்கும்.

எனவேதான் இன்ன வண்டி இப்படிப் போக வேண்டும். சாலையைக் கடக்க இப்படிச் செய்ய வேண்டும் என்றெல்லாம் விதிமுறைகளை அமைத்து அமுல் நடத்தி ஓரளவு விபத்துகளைத் தடுத்து வருகின்றனர்.

அதுபோலவே மனித இனம் காட்டிலும் மலையிலும் தனித்தனியே உலவித் திரிந்தபோது தேவைப்படாத சட்டங்களும் திட்டங்களும், அக்கூட்டம் சேர்ந்து வாழத் தலைப்பட்டதும் தேவைப்

பட்டன. அந்தச் சட்டங்களும் திட்டங்களும் மனித இனத்தில் தோன்றி வளர்ந்தது அறிவின் காரணத்தினுல் ஆகும். பிற விலங்கினங்களில் வெறும் உடல் ஆற்றல் மட்டுமே தகுதியையும் திறமையையும் நிர்ணயித்துத் தலைமையைத் தேடித்தர, மனித இனம் ஒன்றுமட்டுமே அறிவின் துணையை நாடி ஆளத் தலைப்பட்டது. இதுதான் மனிதனின் நாகரிக வளர்ச்சியில் முக்கியமான முதல் கட்டம் எனலாம்.

வாழ்க்கையின் தேவைகளான, உணவு, உடை, உறையுள் இவற்றில் முன்னேற்றம்கண்டதும்,வசதிகளான வாகனாதிகளை ஏற்படுத்திக் கொண்டதும் நாகரிகத்தின் புறச்சின்னங்கள் என்றுகொண்டால், நாகரீகத்தின் உயிர்போன்ற உண்மையான சின்னம், அறிவுக்கு முதலிடம் தந்த செயலாகும்.

அறிவு இப்படி ஆட்சி செலுத்தத் தொடங்கிய போதுதான் ஒரு சில மக்கள் தங்கள் ஓய்வை நன்ருகப் பயன்படுத்திச் சிந்தனையை வளர்க்கத் தலைப்பட்டனர். அந்தச் சிந்தனையில் தோன்றி முகிழ்ந்ததுதான் மதம் என்ற ஒன்றும்.

மனிதன் தனது ஆற்றலுக்கு அப்பாற்பட்டவைகளைப்பற்றி எண்ணி எண்ணி ஒரு முடிவுக்கு வந்தவன்போல், இன்ன இடத்தில் இன்னது காணப்படும் என்று காணுமலே உரைத்ததையும் அறிவின் சாதனை என்றே குறிப்பிட வேண்டும். இந்த வியப்புணர்ச்சியில் தான் முதன் முதலில் மதம் தோன்றி வாழ்ந்திருக்கும். முதன்முதலில் மதம் தோன்றியபோது அதில் தீமைகள் மிகுந்திருந்திருக்கும் என்று எண்ண இயலவில்லை. ஆனல் இன்று மதத்துறையில் காணப்படும் கேடுகளும் இழிதகைமைகளும் எப்படி உண்டாகி இருக்கக்கூடும்? மதம் தோன்றியவுடன் மனித சிந்தனையின் வளர்ச்சியில் ஒரு தேக்கம் தோன்றிவிட்டது எனலாம். சிந்தனை நாள்தோறும் வளர்வது மாறுவது என்ற அடிப்படை உண்மையை மறந்துவிட்ட ஒரு சிலர் மதத்தைப்பற்றிய சிந்தனைகள் மாருமலே சிதையாமலே என்றும் நிலைத்திருக்க எண்ணினர். அவர்கள் சிந்திக்க மறுத்தது மன்றித் சிந்தித்தவர்களையும், எள்ளி நகையாடி, அருவையால் தூற்றி, ஆணவத்தினுல் துன்புறுத்தி, அதிகாரத்தால் சித்திரவதையும் செய்யத் தலைப்பட்டனர். அந்த ஆத்திரமும், ஆணவமும் மதவாதிகளால் இன்றளவும் கைவிடப்படாமல் வளர்ந்து கொண்டே வருகின்றது.

மதவாதிகள் தங்களிடம் முதன் முதலில் உண்டான வியப்புணர்ச்சியைப் பயன்படுத்திச் சமுகத்தில் உயர்ந்த இடம் பிடித்துக் கொண்டு அந்த இடம் தந்த சுகம் இழக்க மனமின்றி அங்கேயே தங்கிவிட்டனர். கீழிறங்கி வந்து மக்களைச் சந்திக்கவோ அல்லது மக்கள் இயல்பான சிந்தனையை வளர்க்கவோ மறுத்து விட்டனர். எனவேதான் மதத் துறையில் கேடுகள் நுழைந்து தலைவிரித்து ஆடத் தொடங்கி விட்டன.

அத்தகைய மதத்தின் தலையாட்டம் விளைத்த கேடுகள் மிகப் பலவாகும். ஒன்ருய், ஓரமைப்பாய் ஒற்றுமையாய் வாழ்ந்து வந்த மக்களுள் உயர்வு தாழ்வு சொல்லிப் பிரித்துக் காட்டிக் கொடுமைப் படுத்தியது மதத்தின் கொடுஞ் செயலே.

மேற்கு நாடுகளின் வாழ்க்கை முறைகளுக்கும், நம் நாட்டின் வாழ்க்கை முறைகளுக்கும் பல வகை வேறுபாடுகள் காணப்படினும், மதம் எனும் ஒரு துறையில் பலவகை ஒற்றுமைகள் காணப் படுகின்றன. அங்கேயும் மதம் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டு மக்களைத் துன்புறுத்தியது; இங்குபோல் அங்கேயும் மதவாதிகள் என்ற போர்வையில்நுழைந்து கொண்டவர்களின் லீலா விநோதங்கள் எவ்வளவோ நிகழ்ந்தன— இங்குள்ளதுபோல்.

மதம் என்ற கோட்டை எங்கோ ஓரிரண்டு இடங்களில்மட்டும் தூய்மை கெட்டுக் காணப்படின் நமது நாட்டுச் சிந்தனையாளர்களைப் போல் உள்ளே இருந்துகொண்டே 'உழவாரப் பணி' செய்து தூய்மைப்படுத்தித் திருத்தலாம். ஆனல் அக்கோட்டையோ பல இடங்களில் ஓட்டையும் விரிசலுமாகி, கீழேயும் பள்ளங்கள் தோன்றித் தேளும் பாம்பும் குடியிருக்க இடம் தந்து, தூண்கள் இற்றுப் போய் பெருங்காற்று அடித்தால் கீழே நொருங்கி உள்ளிருப்போரை ஒழித்துவிடும் நிலையில் இருக்கின்றது. அந்நிலையில் இருக்கும் மதக் கோட்டைக்குள் தங்குவது ஆபத்து என்பதனை உணர்ந்த மேற்குநாட்டுச் சீர்திருத்தக்காரர்கள், தாங்கள் வெளியேறியதுமட்டுமன்றிப் பலரை வெளியேற்றி, முன்னேற்றத்தின் தலைவாயிலிலே நிறுத்தித் தொண்டுபுரிந்திருக்கின்றனர்.

குலவேறுபாடு கருதாது கண்ணில்பட்டவர்கள் அனைவருக்கும் நெற்றியில் நாமமிட்டுப் பூணூல் அணிவித்துப் பிராமணர் ஆக்கி, குருசொன்ன மந்திரத்தைக் கோபுரத்தின் உச்சியில் நின்று எல்லோர்க்கும் சொல்லிய இராமானுசரும், 'குலங் களைந்தாய்......' எனக் குலத்தின் கேடு உணர்ந்த மாணிக்கவாசகரும் 'கண் மூடிப் பழக்கங்கள் மண்மூடிப்போக' எனப் பாடிய இராமலிங்கரும், சித்தர்கள் பலரும் நமது நாட்டுச் சிந்தனையாளர்களே எனினும், இவர்கள் எல்லாம் மதக்கோட்டை என்றும் அழியாது என்று எண்ணி அதற்குள்ளே இருந்து 'உழவாரப்பணி' போல் தூசும் தும்பும் போக்கியவர்கள் எனச்சொல்லலாம். ஆனல் நமது நாட்டில் ஆரியர் கட்டிய மதக் கோட்டையோ தூசும் தும்பும் போக்கினுல் மட்டும் தூய்மை பெற்றுவிடக் கூடியதாக இராமல், உள்ளிருப்போரை வெளிக்கொணர்ந்து வேறிடம் சேர்த்து, (பாழ்கோட்டை வாளா கிடந்தால் பாம்புக்கும் பிறவற்றிற்கும் இடம் தந்து வேறிடம் இருப்போரையும் தொல்லைக்குள்ளாக்கும் ஆனதால்) இடித்துத் தரை மட்டம் ஆக்கப்படவேண்டியதாய் இருக்கிறது.

அத்தகைய பணி மேற்கு நாடுகளில் பல ஆண்டுகளுக்கு முன்னமேயே தேவைப்பட்டது. அங்கு தோன்றிய சிந்தனையாளர்கள் பலவித இன்னலுக்குட்பட்டும், இழிசொற்கள் கேட்டும், துன்புறுத்தப்பட்டும், துயரமனுபவித்தும், உயிரிழந்தும் அப்பணியை மேற்கொண்டு செய்திருக்கின்றனர். அதுதான் பகுத்தறிவின் பாதை.

★

## சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

நிர்வாகி

# ஜான் பிரான்!

[வி. வரதராஜன் பி. ஏ. ஆனர்ஸ்.]

சமீப காலத்தில் சரிந்து போன சர்வாதிகாரிகளில் குறிப்பிடக்கூடியவன் தென் அமெரிக்காவிலுள்ள அர்ஜண்டைனவை ஆண்ட **ஜான் பிரான்!** ஒப்பற்ற தலைவனக விளங்கிய அவன் இன்று ஒண்ட இடம் தேடி அலைகிருன் அமெரிக்காவில்!

அவனுடைய மாட்சியும் வீழ்ச்சியும் குறித்து விளக்கப்படுகிறது, இக்கட்டுரையில். மக்களை வசப்படுத்திக் கொண்டு வாழ முயன்ற அவன், அந்தமக்களைமறந்து மனம் போலாடினன். அதற்குத் துணையாக வாய்த்தாள் **ஈவா** எனும் காதற்கிழத்தி. **இவர்கள் சரிதம், உருசிமிக்க ஒன்று.** மக்கள் தலைவர்கள் மாண்பு கெட்டுப்போனல், அவர்கள் முடிவு என்னும் என்பதற்கோர் எடுத்துக்காட்டு.

—ஆசிரியர்.

அர்ஜெண்டைனவின் தலைநகரமான 'போனஸ்அயர்சின்' வரலாற்றில் 1955 அக்டோபர் 15-ந் தேதி விடுதலை நாளாகும். ஜான் பிரான் தன் சூதாட்டத்தின் கடைசிச் சீட்டைத் திருப்பிய நாள். வீறிட்டெழுந்த மக்கட் படைக்குப் பணிந்து பயந்து பிராகுவேக்கு ஓடிய நாள். அவன் குறிக்கோள்—அப்படி என்று ஒன்று அவனுக்கிருந்தால் — அது தரைமட்டமாகிய நாள்.

தற்சமயம் 40000 அர்ஜண்டைனக்காரர்கள் 'பாலர்மேஸ்' என்ற குடியரசுத் தலைவர் மாளிகையில் குழுமி, அச்சர்வாதிகாரி எங்ஙனம் கொடுங்கோன்மை நடத்தினன் என்பதை பரிசீலிக்கின்றனர். அவன் சேகரித்து வைத்துள்ள பொருள்களைக்கொண்டு ஒரு பெரிய கண்காட்சிசாலை வைக்கலாமாம்.

அக்காட்சிப் பொருள்களில் பிரானும் அவன் காதலி ஈவாவினுடைய பொருள்களும் வைக்கப்பட்டுள்ளன. 'சட்டையற்ருேரின் சகோதரி' என்றழைக்கப்பட்டாள் அவள். எண்ணிறந்த அறைகளில் ஜொலிக்கும் நகைகளும், விலையுயர்ந்த சிற்பங்களும், ஓவியங்களும் உலகிலே கிடைத்தற்கரிய தந்தத்தில் வேலைப்பாடமைந்த பொருள்களும் காணப்படுகின்றன. பசும்பொன்னல் செய்யப்பட்ட டெலிபோனும், உலக உருண்டையும் உள்ளன. இதில் ஒவ்வொரு கண்டமும் கற்களால் இழைக்கப்பட்டு அதன் தலைநகரங்கள் இரத்தினங்களால் பொறிக்கப்பட்டுள்ளனவாம்.

ஈவாவின் உடுத்தும் அறை ஒரு சினிமா நட்சத்திரத்தின் கற்பனை எப்படியிருக்குமோ அவ்வாறு அமைக்கப்பட்டிருந்தது. பர் கோட்டுகள் பல வகைகள் இருந்தன. பாரிசிலிருந்து அர்ஜண்டைனவுக்கு 40000 டாலர்கள் பெறும் கவுன்கள் ஆண்டுதோறும் பறந்துசென்றனவாம்.

பிரான் அறையில் 400 சூட்டுகளும் 200 சோடி ஷூக்களும், அதற்குத் தக்க மற்ற உடைகளும் இருந்தனவாம்! எட்டு மாடிகள் உள்ள கட்டிடத்தில் மேல் மாடியில் ஒரு நீச்சல் குளம். அங்கு 13 முதல் 19 வயது வரையுள்ள பருவ மங்கையர்

"நிலவு செய்யும் முகமும்-காண்பார்
நினைவழிக்கும் விழியும்
கலகலென்ற மொழியும்-கொத்துக்
கனிதுலங்கும் நகையும்"

உள்ள பருவமங்கையர் கழகம் ஒன்று அமைத்திருந்தானும்!

கார் ஷெட்டில் மெருகு குலையாத பளபளக்கும் 16 கார்கள், ரோல்ஸ் ராயிலிருந்து ஸ்போர்ட்ஸ் மாடல் வரை இருந்ததாம். பிரானின் கண்டுபிடிக்கப்பட்ட சொத்துக்கள்வரை இருபது மில்லியன் டாலர்கள் பெறுமாம்.

அவன் பொய்ப் புன்னகையிலும், ஆசையைக் கிளறும் திட்டங்களிலும், ஒன்றுமறியாத மக்கள் மயங்கிவிட்டனர். உண்மையில் அவர்கள் கூலியை அவன் ஏற்றினன்; ஆனல், அதற்குத் தகுந்தாற்போல் விலைவாசிகளும் ஏறின. அதனல், அன்ருட உணவுக்காக அல்லற்பட்டனர். ஜனதிபதி சம்பளம் 8000 பிசோஸ் (முதலில் 1600 டாலர்கள், பிறகு 381 டாலர்கள்) இருப்பினும் அவன் ஏராளமான செல்வங்களைக் குவித்தான்.

ஆரம்பத்தில் பொதுமக்கள் பணம் ஏராளமாக விரயமாக்கப்பட்டது மக்களுக்குத் தெரியாது. ஆனல், ஐக்கிய நாடுகள் சங்கத்திடம் கடன் கேட்டபோது, அதன் பொருளாதார நிபுணர் ரால்பிரிபிஸ்க் என்பவர் நாட்டின் நிலைமையைக் கணக்கிட்டபோது 3000 மில்லியன் டாலர்கள், தீய சட்ட விரோதமான வழிகளில் பாழாக்கப்பட்டதைக் கண்டார். அதோடு வெளிநாட்டு வாணிபத்தில் 1000 மில்லியன் டாலர் கடன் இருந்தது.

நாட்டின் 'கஜானு' காலியாகக் காரணம், பிரானுக்கு வரவு செலவே தெரியாதாம்! மக்களின் தலைவன் என்று சொல்லிக் கொண்டு மனம் போன போக்கில் செலவழித்தான்!!

பிரான் ஒரு பெரும் சூதாடி; அரசியல் சூதாடி. அவன் எதைச் சூதாடினன்? அர்ஜண்டைன பெரும்நாடாக வருவதற்கிருந்த ஒரு வாய்ப்பை—அதன் பண்பாட்டை — அரசியல் கண்ணியத்தை — அதன் நீதியை—நேர்மையை—வைத்துச் சூதாடினன்.

அர்ஜண்டைன, பிரான்சைப்போல் ஐந்து மடங்கு பெரியது. உலகத்திலேயே புலால், தானியங்கள் கொடுக்கும் நாடுகளில் சிறந்த ஒன்று. பொன் விளையும் பூமியும், செல்வம் கொழிக்கும் வளமையும் உடைய நாடு. 18 மில்லியன் சிறந்த குடிமக்களைக் கொண்ட நாடு. 50 மில்லியன் மக்களைக் காப்பாற்றும் வன்மையும் ஆற்றலும் படைத்த நாடு. தற்போதைய எந்த ஐரோப்பிய நாட்டிற்கும் எவ்விதத்திலும் சளைக்காத நாடு. இப்படிப்பட்ட நாடு எங்ஙனம் தனிமனிதனின் பேராசைக்கு இரையாகியது?

பிரான், சாதாரண இராணுவ அதிகாரி. இரண்டாம் உலகப் போரில் ஹிட்லர், முசோலினி இவர்களின் சர்வாதிகாரத்தைக் கண்ணுற்று அதே எண்ணத்தோடு நாடு திரும்பியவன். அர்ஜண்டைன செல்வத்தில் புரள்வதைக் கண்டான். போரின்போது அது ஏராளமான உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்தது. அது போர்த் தொல்லை எதற்கும் இலக்காகவில்லை. எனவே 2000 மில்லியன் டாலர் பாங்கிலும், கடன்மூலமும் சேமித்தது, போர் முடிந்தும் செல்வம் பெருகியது.

ஆனல், உள்நாட்டில் குமுறல் "காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான், அவன் காணத் தகுந்ததும் வறுமையாம்—அவன் பூணத் தகுந்ததும் பொறுமையாம்" என்ற நிலையும் வளர்ந்தது. தொழிலாளர் சங்கங்கள் வலிமையற்றிருந்தன. எனவே, நீதி தேடித் தர நாடியற்றிருந்தன. அரசியல் நிலைமைகளும் முற்றின.

1943ல் ஆர்டிஸ் என்னும் தலைவர் உடல் நலமின்மையால் உபதலைவர் ரோமன் காஸ்டில்லோ என்றவரிடம் பொறுப்பைக் கொடுத்தார். இதை ஒரு இராணுவ ஆக்கிரமிப்பு அதிகாரத்தைக் கைப்பற்றியது. இதை ஆட்டிப்படைத்தது ஒரு நிர்வாகக் குழு. இதில் முக்கிய மனிதன் கர்னல் ஜான் பிரான்.

முதலில் சாதாரண ஆள். ஆனல் ஏற்ற பதவி தொழிலாளர் சங்க செய

லாளன். இதனால் பலமுள்ள துணைவர்களை—எடுபிடிகளை - சம்பாதித்துக் கொண்டான், இதன் பிறகு மக்களுக்குப் பல சமூக உரிமைகள் வழங்கப்பட்டன. விடுமுறை நாட்கள் விடப்பட்டன. கூலி உயர்வு கிடைத்தது. தொழிலாளருக்கு 675 மில்லியன் பீசோசில் (அர்ஜண்டைனா நாணயம்) குறைந்த வாடகை வீடுகள் கட்டித் தர திட்டம் வகுத்தான். நாட்டின் பல மூலைகளுக்கும் பறந்து சென்று தொழிலாளர் சங்கங்களை ஏற்படுத்தினான். அவற்றின் சலுகைகளுக்கு வாதாடினான்.

முதலில் 3,30,000 மக்களே தொழிலாளர் சங்கத்தில் இருந்தனர். அரசினர் ஆதரவோடு பிரான் காலத்தில் 5 மில்லியன் மக்கள் சேர்க்கப்பட்டனர். அதன் தலைவர்களை இவனே தேர்ந்தெடுத்தான். மறைமுகமாக அவர்களுக்குக் கைக்கூலி கொடுத்தான். இவர்கள்தான் 1945ல் ஏற்பட்ட குழப்பத்தில் பிரானின் 'தலை'யைக் காப்பாற்றினர்.

அச்சமயம் ஒரு வாரம் பிரான் தலைமறைவாகத் திரிந்தான். அப்போது அவனுக்கு இருவர் கைகொடுத்து உதவினர். ஒருவர் அவன் காதற் கிழத்தி ஈவா டுவார்ட்டி—ஒரு சாதாரண நடிகை! மற்றொருவன் சிப்பிரியானோ ரியஸ்—புலால் சங்கத் தலைவன். இச்சங்கம்தான் அர்ஜண்டைனாவின் பலமிக்க சங்கம்.

உடனே இச்சங்கினர் பதினேழு படையாக அணிவகுத்துச் சென்று "பிரான் வேண்டும், பிரான் வேண்டும்" என கோஷமிட்டனர். மக்கள் கடல் திரண்டது. எதிரிப் படைகள் முறியடிக்கப்பட்டன. பிரான் வாகை சூடினான். ஈவா இரு வெற்றிகள் அடைந்தாள்! நான்கு நாட்களில் அவர்கள் திருமணமும் அறிவிக்கப்பட்டது!!

பிரான் ஜனாதிபதிக்கு போட்டியிட்டான். போட்டியிடும் மற்றவர்கள் பிரசாரம் செய்ய இடமளிக்காமலும், பிரான் வெற்றிபெறும் அளவுக்கு சூழ்நிலை ஏற்பட்ட பின்னரும், மற்றவர்கள் அனுமதிக்கப்பட்டனர். எதிர் கட்சியினர் பிரசாரம் செய்கையில் குண்டர்களைஏவித்தடுத்தும், போலீஸ் உதவியால் தகர்த்தும் வெற்றி பெற்றான்.

பிரானுக்குள்ள தகுதிகள் எடுப்பான தோற்றம், மற்றவரை மயக்கும் சிரிப்பு; இவற்றிற்கும் மேலாக பொது மக்களின் உள்ளத்தையும், உணர்ச்சிகளையும், ஆசைகளையும், கனவுகளையும் அவ்வப்பொழுது அறிந்துகொள்ளும் அவன் காதலி ஈவா. இருப்பினும் இருவருக்கும் பொருளாதாரத்தின் அடிப்படைத் தத்துவங்கள் கூடத் தெரியாது. எனவே போருக்குப்பின் கிடைத்த அத்தனை செல்வங்களையும் கேளிக்கைகளிலும், களியாட்டங்களிலுமே செலவழித்தனர். இதனால் இன்சால்வன்சி போடுமளவுக்கு நிலைமை வளர்ந்தது.

இருப்பினும் இவர்கள் கைப்பொம்மைகளான தொழிலாளர்களை மகிழ்ச்சியாக வைத்திருந்தனர். கூலியைப் பெருக்கினர். வேலை நேரத்தைக் குறைத்தனர். எவ்விதமான குறைக்கு வேலை நிறுத்தஞ்செய்தாலும் அதற்கு அரசாங்க ஆதரவு தரப்பட்டது. விடுமுறை நாட்கள் விடப்பட்டன. கூலி உயர்வும், பொருள் குறைவும் பணப்பெருக்கத்தை உண்டாக்கின. இதனால் வாங்கும் கூலிக்கும் செலவுக்குமே பற்றுக்குறை.

மேலும் தொழிலாளர்களை மயக்கி பதவிக்கு வந்தது இராணுவத்தினருக்கு மனக்கசப்பையுண்டாக்கியது. எனவே அவர்களையும் தன் வயப்படுத்த அவர்கள் சம்பளம் மானாவாரியாக உயர்த்தப்பட்டது; சிலருக்கு பதவி ஏற்றம் கிடைத்தது. இராணுவமும் இருமடங்காக்கப்பட்டது. பட்ஜெட்டில் 25-முதல் 40-சதவீதம் இராணுவத்திற்கு அழிக்கப்பட்டது. 1943ல் மேல் நிலை அரசியலில் வேலைபார்த்தோர் 150,000! 1950-ல் 650,000 பேராக பெருக்கப்பட்டது!!

பிரான், நாட்டு வாணிகம் அனைத்தையும் தன் கையில் ஆக்கிக்கொண்டான். தன் ஆட்களையே வெளிநாட்டு வியாபாரத்திலும் அனுமதித்தான். போருக்குப்பின் ஐரோப்பிய நாடுகள் விளைபொருட்களை விலை விக்க ஆரம்பித்தவுடன் அர்ஜண்டைனா படுத்துவிட்டது. பணப்பெருக்கமும் ஏற்பட்டது. விலைவாசிகள் விஷம்போல் ஏறின. இப்பொழுதும் மீண்டும் ஏழு ஆண்டுகட்கு மக்களை வஞ்சித்து வாழும் சக்தியைப் பிரான் பெற்றிருந்தான்.

ஈவா மக்கள் நாடியைப் பிடித்து தக்க மருத்துவம் புரியும் வன்மை பெற்றவள். அவர்களுக்கு என்ன தேவை; அதை எங்ஙனம் பெற முடியுமென்பதை நன்றாக அறிவாள். பலமில்லியன் டாலர்களில் தானாகவே ஒரு அச்சகத்தையும், ரேடியோவையும், செய்திப் படக் காட்சியையும் அமைத்தாள்.

மற்ற அச்சகங்களுக்கு காகிதம் கொடுப்பதைக்குறைத்தனர். இவ்வாறு மாற்றுக் கருத்துகளைத் தாங்கிவரும் இதழ்கள் கொஞ்சங் கொஞ்சமாக நசுக்கப்பட்டன.

ஈவா அதற்குள் மூன்று தினத்தாள்களை வாங்கிவிட்டாள். போனஸ் அயர்சில் இருந்த 14 பத்திரிகைகளில் பத்து இவர்கள் வசம், நூற்றுக்கணக்கான பத்திரிகைகள் இருக்கும் இடம் தெரியவில்லை. மற்றவைகளை இவர்கள் கையாட்கள் எடுத்து நடத்தினர்

பத்திரிகை
வானொலி
செய்திப்படக் காட்சிகள்

இவைகளால் மூன்று பயன்கள் ஏற்பட்டன. 1. இவை பிரானுக்கும் அவன் கையாட்களுக்கும் ஏராளமான வருவாயைக் கொடுத்தன. 2. மாற்றுக் கருத்துக்கள் பரவுவதைத் தடை செய்தன. 3. பிரான் அவன் மனைவி ஈவா இவர்களின் நாட்டு நலத்தின் ஆர்வத்தை விளம்பரம் செய்யப் பயன்பட்டன.

பல்கலைக் கழகங்களில் இவ்வநியாயத்தை எடுத்துச் சொல்வோரின் பதவிகள்பறிக்கப்பட்டன. புதிய 2000 கல்வியாளர்கள் நியமிக்கப்பட்டனர். புதியவர் அனைவரும் பிரானுக்கு துதி பாடுவோர் — போற்றித் திருஅகவல் படிப்போர். நீதி மன்றங்களிலும் பிரானின் எதிரிகள் வேலையினின்று விரட்டியடிக்கப்பட்டனர்.

முசோலினியும், ஹிட்லரும் செய்யாத ஒருசெயலைப் பிரான் செய்தான். தன்னையே கடவுள் எனக் கூறிக் கொண்டதுதான் அது. மக்கள் மனக் கொதிப்படைந்தனர். தொழிலாளர் வருவாய்குறைந்தது. இராணுவத்தினர் எதிர்த்தனர். எனவே சிலரைப் பதவியிலிருந்து ஓட்டினான்.

பிரானை ஈவா கடவுள் என்று கூறினாள்; பிரான் ஒருவனே நமக்குள்ளான். அவன் நமக்கு கடவுள்—கதிரவன்—காற்று—உயிர்- என்றாள். ஒரு அமைச்சன் பிரானை புத்தருக்கும் நபிக்கும், இயேசுவுக்கும் ஒப்பிட்டுப் பேசினான்.

இதைப்போன்றே ஈவாவும் புகழப்பட்டாள். "செயிண்ட் எவிதாடே" கொண்டாடப்பட்டது. அவள் 1952ல் இறந்தவுடன் இது அதிகமாயிற்று. "இறவாத எவிதா" என்றபடம் எடுக்கப்பட்டது.

அர்ஜண்டைனாவில் 90 சதவீதம் கத்தோலிக்கர்கள் அவர்கள் முதலில் இவனை நம்பினர். மதகுருக்களும் இவன் உண்மை உருவினைக் கண்டு கொண்டனர், எதிராக கிளர்ச்சியும் செய்யத் தூண்டினர். அதில் அனைவரும் சேர்ந்தனர்.

இச்சமயத்தில் பிரான் அரசியல் அலுவல்களைப் பலரிடம் ஒப்படைத்து விட்டு, கேளிக்கைகளில் காலங்கழித்தான். பல இளம் அழகிகள் அவனை சூழ்ந்த வண்ணமிருக்கச் செய்தான். அவர்களில் அவன் ஆசைக்குரிய பதினாறு வயது பாவை ஒருத்தி.

இச்சமயத்தில் சென்றஜூன்மாதத்தில் ஒரு புரட்சி மூண்டது. அது தோற்றது. இருப்பினும் பிரானின் வலிமையற்ற தன்மையைக் காட்டியது. பின்னர் மூன்று மாதங்களில் மீண்டும் மக்கள் கடல் கொந்தளித்தது. பிரானின் உல்லாசப் படகும் கவிழ்ந்தது.

அர்ஜண்டைனா தலைநிமிர்ந்து நிற்க ஆரம்பித்துவிட்டது. மீண்டும் புதிய ஒளி, புதிய நம்பிக்கை பூத்துள்ளது! ★

# பெர்னார்ட் ஷா

எழுத்தாளர்கள், மார்பை நிமிர்த்தி நடக்கலாம் — வணிகக் கோமான்கள், நிலம் படைத்த சீமான்கள் — அதிகாரிகள் ஆகியோர்மட்டுமே பெரும்பொருள் திரட்ட முடியும் — எழுத்தாளர், கடைசிவரையில் ஏழையாகத்தான் இருந்து தீருவர் என்று கூறுவதற்கில்லை, சீமான்கள் கண்டு பொறுமை அடையத்தக்க செல்வவானுமாகலாம் என்ற நம்பிக்கையை, எழுத்தாளர்கள் இனிப் பெறமுடியும்! எழுத்தாளர் இனத்துக்கே இந்த எழுச்சி ஏற்படத் தக்கவிதமாக, ஜார்ஜ் பெர்னார்ட் ஷா, தமது எழுத்துமூலம் பெரும் பொருள் திரட்டிவைத்திட முடிந்தது.

பெர்னார்ட் ஷா, புதுமுறை எழுத்தாளர்—பகுத்தறிவினைச் சுவைபட எடுத்து எழுதும் திறன் படைத்தவர்—கேலியும் கிண்டலும் செய்தே பழைமை எண்ணங்களைக் கண்டித்தவர் — சமதர்மம் உலகிலே பரவவேண்டும் என்பதற்காகப் பாடுபட்டவர் — அவருடைய நூற்களை அகில உலகமும் போற்றிப் புகழ்ந்தது; அவர் தீட்டிய நாடகங்களில் நடிப்பது, நடிகர்களுக்குப் பெரும் பேறு என்று கருதப்பட்டது—அவருடைய கதைகளில் பலவற்றைச் சினிமாப் படம் ஆக்கினர்—பல்வேறு மொழிகளிலே அவருடைய நூற்கள் மொழிபெயர்க்கப் பட்டன. பல இலட்சக்கணக்கிலே அவருடைய நூற்கள் விற்பனையானதால், ஷாவுக்கு, அதன்மூலம் ஏராளமான வருமானம் கிடைத்தது, அவர் விட்டுச் சென்றுள்ள சொத்தின் மதிப்பு 600,000 பவுன்!! ஒரு எழுத்தாளர், நாடகாசிரியர், இத்துணைப் பெரும் செல்வத்தைத் திரட்டமுடியும் என்று எவரும் எதிர்பார்த்திருக்கவேமாட்டார்கள்.

பிரிட்டனில் அமுலில் உள்ள மரணவரித் திட்டத்தின்படி, பெர்னார்ட்ஷா விட்டுச் சென்றுள்ள சொத்திலே, நூற்றுக்கு எழுபது பங்கு வரியாகி, சர்க்காருக்குச் சென்றுவிடும்—420,000 பவுன் வரியாகிவிடுகிறது. மீதமிருக்கும் செல்வத்தை பெர்னார்ட்ஷா, ஒரு நூதனமான பணிக்காகப் பயன்படுத்தும்படி ஏற்பாடுசெய்துவிட்டிருக்கிறார்.

40 எழுத்துகள் கொண்டதாக, ஆங்கில மொழியினைத் திருத்தி அமைத்திடும் காரியத்துக்காகத் தமது சொத்திலே பெரும் பகுதியை ஒதுக்கிவைத்துள்ளார்—மற்றும் பிரிட்டிஷ் மியூசியம், நாடகக் கழகம், அயர்லாந்தில் உள்ள கலைக் கண்காட்சிக்கூடம் ஆகிய அமைப்புகளுக்கும், அவர் சொத்திலே பங்கு கிடைத்திட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஜார்ஜ் பெர்னார்ட்ஷா, தமது கருத்துமூலம், உலகிலே பல அறிவாளர்களைச் சிந்திக்கவைத்துவிட்டதுபோலவே, தமது சொத்து எங்ஙனம் செலவிடப்படவேண்டும் என்று செய்துள்ள ஏற்பாட்டின் மூலமும், சிக்கலை ஏற்படுத்திவிட்டிருக்கிறார்!

40 எழுத்துகள் கொண்டதான ஆங்கில மொழிக்கு ஆக்கம் தேடுவதற்காக, தமது சொத்திலே பெரும்பகுதியை 'நன்கொடை'யாக்கிச் சென்றது, சட்டப்படி செல்லுமா என்பதுபற்றி, விரைவில் வழக்கு மன்றத்திலே விசாரணை நடக்க இருக்கிறது.

பேனா மன்னர்கள் என்று பலருக்குப் பாராட்டுரை வழங்கப்பட்டிருக்கிறது, என்றாலும், ஷாபோல பேனாமூலம் பெரும்பொருள் திரட்டிடப் பலரால் இயலாதுபோயிற்று.

எழுத்தாளர் உலகம், ஷாவைப் பற்றி எடுத்துக்காட்டியும் எண்ணிப் பார்த்தும் இன்புறக்கூடும்—எழுத்துமூலம் பெரும் பொருள் திரட்ட முடியும் —என்று கூறிக் குதூகலப்படமுடியும்.

எழுத்தாளன்தானே! என்று யாரேனும் கேலியாகப் பேசுவரேல், எழுத்தாளர் என்றால் கேவலமா! எமது பெர்னார்ட்ஷா, எழுத்துமூலம் சம்பாதித்தது எவ்வளவு தெரியுமா—600,000 பவுன் என்று பெருமிதத்துடன் கூறிடலாம்.

எப்படி முடிந்தது, இந்த அளவு பொருள் திரட்ட?

ஆங்கில மொழிக்கு அத்துணை விரிந்து பரந்த சாம்ராஜ்யம் இருக்கிறது—ஆங்கில ஏடுகள், இந்தக் கோடியான ஆஸ்திரேலியாவிலிருந்து, மற்றோர் கோடியான கனடாவரையில் பரவ வழி இருக்கிறது; மக்களிடம் கல்வி நிரம்பி இருக்கிறது; ஏடுகள் வாங்குவதிலே மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறார்கள்; தமது மாளிகைக்கு அலங்காரம், மேனிக்கு ஆபரணம், வண்டி வாகனாதிகளிலே மினுக்கு இருக்கவேண்டும் என்றுமட்டும் கருதாமல், தமது இல்லம் படிப்பகமாக இருந்திடவேண்டும், அப்போதுதான் எழிலும் இன்பமும், சுவையும் பயனும் கிடைக்கும் என்று நம்புகிறார்கள் — ஏடுகளை ஏராளமாக வாங்குகிறார்கள்—எனவே, கருத்துக்கு விருந்தாக அமையும் ஏடுகள், இலட்சக்கணக்கான படிகள் அச்சாகின்றன, விலையாகின்றன, பதிப்பகத்தாருக்கும் நல்ல வருவாய், எழுத்தாளர்களுக்கும் நிரம்பச் செல்வம் சேர்ந்திட முடிகிறது.

இங்கு மொத்தமாக இரண்டாயிரம் பிரதிகள் செலவாகிவிட்டால், அந்த எழுத்தாளன் 'பாக்யவான்' என்று கருதப்படுகிறான்.

தப்பித் தவறி, யாருக்காவது, மக்கள் உள்ளத்தைக் கவரத்தக்க கருத்தோவியம் தீட்டிடும் திறம் அமைந்து, ஏடுகள் சற்று சூடு பிடித்து, விற்கிறது என்றால், வயற்றெரிச்சலைக் கொட்டி, வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு, எழுதிப் பிழைக்கிறானே! எழுத்தால் வாழுகிறானே—என்று கதறும் குணவான்கள் இருக்கிறார்கள். அங்கே, பெர்னார்ட்ஷா 600000 பவுன் திரட்டிட முடிந்தது, எழுத்துலக மன்னனாகத் திகழ்ந்ததால்.

✱

## திருச்சி நோக்கி

( ந. கண்ணன் )

—

விந்தியத்திற் கப்பாலே
வடவர் வேந்தன்
வேல்கொண்ட தமிழனது
வீரம் பற்றி
மந்தமாய் சொன்னவுடன்
தமிழர் மன்னன்
வாளுக்கு விருந்தூட்ட
வடக்கே சென்றான்
செந்தீயாய் மாறிவிட்டான்!
எதிர்த்தோர் தம்மின்
சிரந்தன்னில் கல்சுமக்க
செய்தான் அன்னோன்
வந்தவழி வந்தநாம்
இயக்கம் பற்றி
வைவோரை 'வா'வென்போம்
திருச்சி நோக்கி!

# திருமணம்.................

**தம்பி!**

ஒரு திருமணம், காண்போம் வருகிருயா? தடையா கூறப் போகிருய், ஆரியத்துக்கு அடிமைப்பட்டு விட்டதால் பண்பு கெட்டுப்போன திராவிடச் சமுதாயத்தில், புத்தறிவு புகட்டும் புது முறை முயற்சியல்லவா, நமது சீர்திருத்தத் திருமணமுறை, அதைக் காண்பதிலேயே ஓர் களிப்பு, அதில் கலந்துகொள்வதிலே ஓர் பெருமை அதனல் ஓர் இனிமை ஏற்படுமே, நானு, திருமணம் காணத் தடை சொல்லப் போகிறேன். வா, அண்ணு! போகலாம் என்று தான் கூறப்போகிருய், தெரியும். அங்கு சென்ருல், பண்டைத் தமிழகத்தின் பாங்கும், பகைவரின் பாதம் பற்றுவோராக நம் இனத்தவர் கிழ்நிலை செல்லுமுன் திரு இடத்தில் இருந்து வந்த சீரும் சிறப்பும், தலைவன் தலைவி என்ற தொடர்பிலே இருந்த தூய்மையும் தோழமையும், சத்தற்ற சடங்குகட்கும் பொருளற்ற மந்திரங்கட்கும், புரோகிதப் பித்தலாட்டத்துக்கும் ஆட்படாமல், காதலிருவர் கருத்து ஒருமித்து ஆதரவு பட்டதே இன்பம் என்ற கொள்கையும், கணனுடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனுமில என்ற மறைமணி ஒளியும், திருமணம் என்பது வாழ்க்கைத் துணை ஒப்பந்தம் எனும் பேருண்மையும், கேட்போர் ஏற்கும் வண்ணம் எடுத்தியம்பிட நமது தோழர்கள் வருவார்கள், கேட்டு இன்புற, பழைமை விரும்பிகள் கூடப் பேராவல் காட்டுவர், மணமாலை அணிந்து முகத்தை மலராக்கிய நிலையில் மணமக்கள் அமர்ந்திருப்பர், அங்கு புகையும் நெடியும், குமுறலும் குளறலும், வாதமும் பேதமும், வம்பும் வல்லடியும் இரா, எவரிடமும் இன்முகமும் இனமொழியுமே காணப்படும், அப்படிப்பட்ட அழகிடம் வருவதற்கு யாருக்குத்தான் விருப்பம் எழாது, இதோ வருகிறேன், அண்ணு! எங்கே அந்தத் திருமணம், தலைமை தாங்குபவர் யார், எவரெவர் பேசுவர், என்றெல்லாம் தான் கேட்டிடத் துடிக்கிருய். ஆனல் தம்பி, நான் உன்னை அழைப்பது, சீர்திருத்தத் திருமணத்துக்கு அல்ல! இது வேருேர் வகையான—முற்றிலும் வேருன— திருமணம். எனினும், கண்டால், உள்ளத்திலே ஓர் எழுச்சி பொங்கும், உரையிலே ஓர் புது உறுதி ஒலிக்கும், கண்களிலே ஓர் புத்தொளி எழும்; இத்தகைய திருமணம், அடிக்கடி காணக் கூடியதுமல்ல, கண்டால் எளிதிலே மறந்துவிடக் கூடியதுமல்ல என்பதனை நீயே ஒப்புக்கொள்வாய்.

நெடுந்தொலைவிலே நடைபெறும் திருமணம் — தம்பி — சிந்தனைச் சிறகடித்துக்கொண்டு கிளம்புகிறோம், எளிதாகச் சென்றுவிடலாம், கடலும் மலையும் குறுக்கிட்டு நம்மைத் தடுத்திட முடியாது —பல்வேறு நாட்டுக்கட்டு திட்டம், சட்டம் எதுவும் நம்மைத் தொட்டிழுத்திடாது அல்லவா!

மணமக்கள், தம்பி, ஆமாம்! முகத்திலே இனிமையுடன் ஓர் கெம்பீரம் தெரிகிறதல்லவா!! மணவிழாவில் கலந்து கொள்வதிலே மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் கொண்டோராகக்கூடி இருப்போர், ஏன், மணமக்களை அப்படிப் பாசத்தோடு பார்க்கின்றனர், என்று புரியவில்லை அல்லவா? இதைக் கேள், தம்பி, புரியும்.

**மணமகன் — ஓர் கைதி!**

ஆமாம், தம்பி, சிறையினின்றும் விடுதலை பெற்று, உடனே, முன்பே ஏற்பாடாகி இருந்த திருமணத்தை முடித்துக் கொள்கிருன் போலும் என்று எண்ணிக் கொள்வாய். அது போன்ற நிகழ்ச்சியேகூட உள்ளத்திலோர் நெகிழ்ச்சி தரவல்லது தான்; இஃது, அதனினும் அரியதோர் நிகழ்ச்சி.

மணமகன், கைதி! திருமணம் செய்து கொள்வதற்காக மட்டுமே, 'விடுதலை' இவ்வீரனுக்குத் தரப்பட்டிருக்கிறது; திருமணமானதும் மீண்டும் சிறை செல்ல இருக்கிருன்.

கைதிக்குக் கடிமணம், அதைக் காண ஓர் கூட்டம்; காண்பதிலே ஓர் பெருமை! வேடிக்கையாக அல்லவா இருக்கிறது.

இந்தக் கைதி, ஒரு நாட்டு மக்களின் உள்ளத்தைத் தன் தொண்டினுல் தொட்டுவிட்டவன்; எனவே தான் அவன் திருமணம் காணத் திரண்டுள்ளனர்.

இடம், சைப்ரஸ் தீவு!! இந்தத் தீவு இன்று பிரிட்டிஷ் ஆதிக்கத்தின்கீழ் இருக்கிறது; தாயகமான கிரீஸ், இந்தத் தீவு, அன்னியர் பிடியில் இருப்பதை எங்ஙனம் ஏற்றுக் கொள்ளும்? சைப்ரஸ் தீவும் எப்படி, தாயகத்திலிருந்து வேருக்கப்பட்டு, பிரிட்டனுக்கு வெள்ளாட்டி வேலை செய்து பிழைக்கும் தாழ்நிலையை ஒப்பும்? எனவே, அங்கு விடுதலைக் கிளர்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வெறியைத் தாங்கிக்கொண்டு, வீர இளைஞர்கள்



விடுதலைப் போர் நடத்துகிறார்கள். மனுப் போடுவதும் மாநாடு நடத்துவதும் பலன் தரவில்லை! நாடெங்கும் கிளர்ச்சிகள் நடத்தினர், மதிக்கவில்லை. கல்லூரிகளில் விடுதலை முழக்கம் கேட்டது—கவலை கொள்ளவில்லை. மாதா கோயில்களிலே 'விடுதலை மான்மீயம்' உபதேசிக்கப்பட்டது — சட்டை செய்யவில்லை. கர்த்தரின் ஊழியர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்-அதனையும் மதிக்க மறுத்தது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம். பிறகு கைக்குண்டு வீசியும், காடுகளில் பாசறை அமைத்துப் போராடியும், பிரிட்டிஷ் தளங்களைத் தாக்கியும், போரிடலாயினர்; சைப்ரசில், பிரிட்டிஷ் படைகள் குவிக்கப்பட்டுள்ளன. பாதிரியாரானாலும் பல்கலைக் கழக மாணவனானாலும், அடுக்களை அணங்காயினும் அலுவலகத்தாராயினும், சைப்ரஸ் விடுதலை பெற வேண்டும் என்ற நோக்கம் காட்டினால், பிரிட்டிஷ் எதேச்சாதிகாரிகளால், சிறைச்சாலைக்கு இழுத்துச் செல்லபபடுகிறார்கள்!

இந்த மணமகன், அதுபோலச் சிறைப் பட்டவன்!

தாயக விடுதலைக்காகப் பாடுபட்டான்; எதேச்சாதிகாரிகளிடம் பிடிபட்டான்; சிறை சென்றான்!!

அவன் காதலைப் பெற்றவள் கண் கலங்கி நின்றாள்.

பேயரிடம் பிடிபட்டவன், என்ன முடிவு எய்துவானோ! வீர சுதந்திரம்வேண்டுபவரை,வெறியர், எது தான் செய்யாதிருப்பர். மகாரீயாஸ் பாதிரியாரை, அவர் ஜெபதப மூலம் கர்த்தரின் அருளைப்பெற்று அனைவருக்கும் வழங்கிடும் பூஜிதர் என்பது பற்றியும் கவலையற்று, அவர் காட்டிய நாட்டுப் பற்றினையும் விடுதலை வேட்கையினையும், மன்னிக்கமுடியாத குற்றமெனக் கொண்டு, கண்காணா இடம் இழுத்துச் சென்றல்லவா, சிறைபடுத்தி விட்டனர்! இவனோ காளை! இவனை பிரிட்டிஷ் ஆட்சியாளர் என்னென்ன கொடுமைகளுக்கு ஆளாக்குவரோ — சிரச்சேதமோ சித்திரவதையோ— என்ன நேரிடுமோ......என்றெல்லாம் எண்ணி எண்ணி, அவனைக் காதலனாகப் பெற்ற காரிகை கண்ணீர் உகுத்திடாதிருந்திருக்க முடியுமா?

கண்டனர்-காதல் கொண்டனர் —கடிமணம் அவர்கட்கு இன்ப வாழ்வளிக்கும்—என்று உற்றார் உறவினர் எண்ணியிருப்பர்; ஊரார் பொருத்தமானதோர் காதல்ஜோடி இது, என்று கூறி வேடிக்கை பேசியிருப்பர்.

எல்லாம் கனவு! எல்லாம் கனவு! —என்று கூறுவதுபோல, இளைஞன், சிறைக்குள் தள்ளப்பட்டு விட்டான்.

அவள் கன்னத்தைக் கிள்ளிய போதும், கூந்தலைக் கோதியபோதும், அதரம் அதரத்துடன் உறவாடிய வேளையிலும் ஆரத்தழுவிய போதும், அன்பே! ஆருயிரே! என்று கொஞ்சியபோதும், இருவரும் இன்பலோகம்சென்றிருப்பர்.

ஆனால் காதலியைப் பெற்றதால், அவன் அடைந்த களிப்பு—அவன் கண்களை மறைத்துவிடவில்லை — அதேபோது அவனுக்குத் தன் தாயகம் தளையுண்டு, தருக்கர் ஆட்சியில் சிக்குண்டு, மதிப்பிழந்து கிடந்திடும் கீழ்நிலையும் தெரிந்தது — தெரிந்ததும் நெஞ்சிலோர் தணல் நுழைந்தது.

**புத்தர் பொன் மொழி**

சோம்பலுடன் பலவீனமாக நாலு வருடம் வாழ்வதைக் காட்டிலும், வீரியத்தோடு முயற்சித்து, ஒரு நாள் வ-ழ்வதே மேலானது.

பக்கத்திலே ஓர் பாவை, காதற் கனிரசம் ஊட்ட! பருவமோ காதற் பாங்கினை அனுபவித்திடுவதற்கு ஏற்றது! எனினும், உலவும் மண், உள்ளேபுகும் காற்று — அடிமைமுடைநாற்றம் வீசுவதாக இருக்கிறது! நாடு அடிமைக் காடாகிக் கிடக்கிறது — காதல் வாழ்விலே நாம் இன்பம் தேடிக்கொள்கிறோம் —நாடோ அன்னியன் பிடியில் சிக்கி நாற்றமடித்துக் கிடக்கிறது இந்நிலையில் நாட்டை மறந்து, நாம் காதற் தோட்டத்திலே உலவிக் களிப்படைவது இயலுமா, முறைதானாகுமா? என்று அந்த இளைஞனால் எண்ண முடிந்தது. தம்பி! காதலியின் கடைப்பார்வை கண்டு விட்டால், எதனையும் மறந்து, எல்லாம் இந்த ஏந்திழையாளின் முகத்தில் கண்டிடலாம், :என்றிருப்பதற்குத்தான், மிகப் பெரும்பாலான இளைஞர்களால் முடியும். முதியவர்களே, இன்றைத மென்று அசைபோடும் முறையில், அப்போது நடந்தவைபற்றி எண்ணி மகிழத் தொடங்கிவிட்டால், மற்றவற்றை மறந்திடும் நிலைபெற்று விடுகிறார்கள் என்றால் இளைஞன் நிலை எங்ஙனம் இருந்திடும், எனினும், காதலின்பத்தில் கட்டுண்டு கிடந்த இக் காளைக்கு, நாட்டு நிலை பற்றியும் எண்ணிட முடிந்தது—நாட்டுஅடிமைத்தளைகளை உடைத்திடும் நற்பணியாற்ற வேண்டும் என்று துணிந்திடவும், செயல்படவும் முடிந்தது! சிறைப்பட்டான்! கண்ணீர் சிந்தியிருப்பாள், அவன் விரும்பிய சிற்றிடையாள் — எனினும் அந்த நிலையிலும் அவள் முகத்திலோர் தனிவகை எழில் பூத்துத்தான் இருக்கும்; என் கண்ணாளன் என் அருகில் இல்லை—என் எதிரில் இல்லை—என்னைத் தொட்டிழுத்து விளையாடவும், கட்டிமுத்தம் தந்திடவும் முடியாத நிலையில், பூட்டி வைக்கப்பட்டுத்தான் இருக்கிறான், சிறைக்கொட்டடியில்! அவனைக் காணுவதால் என் களிப்பு கருகிடத்தான் செய்கிறது! ஆனால், என்னவென்றான், நாட்டு விடுதலை வீரன்—அஞ்சாநெஞ்சன்—தன் சுகம், தன் இன்பம் பெரிதல்ல, தாய்நாட்டுக்குத் தொண்டாற்றும் கடமையே பெரிதென்று கொள்கைகொண்ட குணக்குன்று என்று எண்ணும் போது, நெஞ்சிலே சாக்கும் தேன் ஊற்று கருகிடும் களிப்பை, செழுத்திடவைக்கிறது, புதியதோர் பூரிப்பும் பெருமையும் கொள்கிறேன். என்று அந்தப்பூவை எண்ணாமலிருக்க முடியுமா?

அவளும் அவனும், சைப்ரஸ் தீவுக்கு மட்டுமல்ல, விடுதலைக் காவியத்துக்கே ஏற்றவர்களாகி விடுகின்றனர்!

எப்போது திருமணமுடனக்கு?

அவர் வெளியே வந்ததும்!

இந்த உரையாடலில், பிரிவாற்றாமை தரும் வாட்டத்தை ஓட்டிவிடுமளவுக்கு, காதலன் நாட்டுக்கு உழைத்ததால் சிறைபட்டிருக்கிறான் என்ற உணர்வுதரும் பெருமையுமல்லவா, ஒலிக்கிறது.

அத்தகைய திருமணமடா, தம்பி இது!!

நாட்டைப் பிடித்து ஆட்டிப் படைத்திடும் போக்கினருக்கு, எக் காரணத்தாலோ, கைச்சவையும் இருக்கும்போல் தோன்றுகிறது.

ஆகவேதான், எந்த வீரனைப் பிடித்து வெஞ்சிறையில் அடைத்தனரோ, அவனை, திருமணம் செய்து கொள்ள அனுமதி அளித்து, அதற்காக வெளியே சென்றுவர 'விடுதலை'யும் தந்தனர்.

கைதியைக் கடிமணம் செய்து கொள்ள, காரிகைக்கு மனம் இடம் தராது என்றெண்ணினரோ— அன்றி, கைதியாக இருக்கும் நிலையில் கலியாணம் ஒருகேடா, என்று அந்த கர்மவீரனே சலித்துக் கொள்ளுவான் என்று எண்ணினரோ—காரணம் எதுவோ தெரியவில்லை, சிறைபட்டுக்கிடந்தவனைத் திருமண விழாவுக்காக மட்டும் வெளியே விடுவித்தனர்.

'அவனும் அவளும்' சைப்ரஸ் தீவின் எழுச்சியும் எழிலும், உருவெடுத்ததுபோல, மணவிழா நிகழ்ச்சிக்கு வந்துள்ளனர்; இந்த வீரனுக்கு நடைபெறும் மணவிழாவில் கலந்துகொண்டு விடுதலை வரலாற்றிலே இடம் பெறப் போகிறோம் என்ற பெருமிதத்துடன் உற்றார் உறவினரும் ஊர்ப்பெருமக்களும் கூடி உள்ளனர்.

மணமகன் பெயர் ஆண்டிரியாஸ் ஜோனைட்ஸ்.

ஜோவுலா ஜோனுட்பூர் என்பது மணமகள் பெயர்.

உச்சரிக்கவோ, நினைவிற்கொள்ளவோ, கடினமானபெயர், தம்பி, எனவே நாம் மணமகனை எழுச்சி என்றழைக்கலாம், மணமகளை, எழில் என்று அவளை அழைத்திடச் சொல்வோம்.

திருமணம் நடைபெறும் இடத்தின் பெயரும், உச்சரிக்கக் கடினமானது— கோகிநோட்ரிமிதியா —நமக்கேன் தொல்லை — இந்தச் சிற்றூருக்கு நாம் வீரபுரி என்று பெயர் வைத்தழைப்போம்.

மணமகன், கரங்களில் விலங்குடன்தான் அழைத்து வரப்பட்டான்...போலீஸ் அதிகாரிகள் உடன்வந்தனர்.

திருமண மண்டபத்துக்குள் நுழையும்போதுதான், விலங்குகள் அகற்றப்பட்டன.

அவனை மணாளனாகக் கொள்ளும் எழில் இருபத்தாண்டுப் பாவை!

பாதிரியார், ஆசீர்வதிக்கிறார்— அந்த சிற்றூரின் மக்கட் தொகை ஆயிரத்துக்கும் குறைவு—ஆனால் அவ்வளவு மக்களும் அங்கு கூடி இருக்கிறார்கள்; முக மலர்ச்சியும் கண்ணீரும் சேர்ந்து காட்சி தருகிறது.

வாழ்க! வாழ்க! என்று அவர்கள் தழதழத்த குரலில் வாழ்த்துகிறார்கள். தம்பி! மணமக்களை மட்டுமா? வீரத்தை வாழ்த்துகிறார்கள்! பெருமைக்குரிய அந்த மணப்பெண்ணின் உளத்திண்மையை வாழ்த்துகிறார்கள்! இத்தகைய சம்பவங்கட்கெல்லாம் பிறப்பிடமாகிவிட்ட தமது தாயகத்தை வாழ்த்துகிறார்கள்.

அதோ பார் தம்பி! கிராமத்து மக்களின் கனிவை — பரிசுப் பொருள்களைக் கொண்டு வந்து குவிக்கிறார்கள், கண்ணீரைத் துடைத்தபடி, மணமக்களின் கை குலுக்கி வாழ்த்துகிறார்கள்!

வெண்ணிற ஆடை அணிந்த மணமகள்—மணமகனைத் தழுவிக் கொள்கிறாள்! இருவரும் ஏதோ பேசுகிறார்கள். என்னபேசுவார்கள்

### புத்தர் பொன் மொழி

இவ்வுலகில் எந்தக் காலத்திலும் பகைமை, பகைமையால் தணிவதில்லை; பகைமை அன்பினாலேயே தணியும். இதுவே பண்டை அறநெறி.

எண்ணம் ஈடேறிவிட்டது, இன்பமே!

கனவு பலித்தது, கண்ணாளா!

வானகம், வையகம் வந்தது என் வண்ணப் புறாவே!

தேனமுதைச் சொல்லாக்கித் தருகிறீரே, என் தேவனே!

மலர் பறிப்போமா, என் மனோஹரி!

மணம் தேடிச் செல்கிறீரோ, என் மணாளரே!

பெரும் பிழை புரிந்துவிட்டேன், பெருமைக்குரியவளே! உன் முக மலர் என் கரத்திலிருக்க, நான் வேறு மலர் தேடுவது, மடைத்தனம்தான்.

போதும் விளையாட்டு!

புனலாடலாம், பொழுது சாயும் வரை.

பிறகு...... அதற்குப் பிறகு......

உன் மடியில் நான்...... என் கரத்தில்......

அந்தி சாய்ந்ததும், ஆரணங்கே......

அந்தி சாய்ந்ததும்......

கன்னங்களைக் கிள்ளிக் கிள்ளி......

கண்ணே......

என்ன, அன்பே! குழந்தை போல!

நகரத்து நாட்டியச் சாலைக்கு உன்னை அழைத்துச் செல்வேன்...

சாயம் பூசிய உதட்டுக்காரிகளின் சல்லாபம் பார்க்கவா......? வேண்டாம்......

படக்காட்சிக்குச் செல்வோமா...

அங்கு காதல் கிடைக்கப்பெறாததால் கலங்கும் காட்சி காட்டுவர்... வேண்டாம், அன்பே......

ஓவியக் காட்சி......?

எனக்கென்று உள்ள இந்த உயிரோவியம் போதும் என்று சொன்ன சொல்லை மறந்தீரோ...?

மறப்பேனா, மாதரசி! உன்னை மகிழ்விக்க, நான் என்ன காட்சிக்குத்தான் அழைத்துச் செல்வது..?

என்னை மகிழ்விக்கவா, மன்னா?

ஆமாம், என் இன்பமே!......

என்னை மகிழ்விக்க......

எங்கு அழைத்துப்போக, ஆருயிரே......

என்னை மகிழ்விக்க...... என் குணாளா! எங்கும் என்னை அழைத்துச் செல்லவேண்டாம் ... என் அருகில் இருந்தால் போதும்......என் அருகில்...... இன்னும்... இடைவெளி இல்லா நிலையில்...... இதுதான் கண்ணே என் இன்பம்...... ஆம்! வேறு மகிழ்ச்சி தரும் இடமும் உண்டா... என்னைப் பிரியா நிலை வேண்டும்... என் அருகே...... இன்னும் அருகே......

இது போலவும் இதனினும் சுவை கொட்டவும் காதலர்கள் பேசிக்கொள்வர்—நாடக மேடையிலேனும்!!

தம்பி! கடிமணம் முடிந்தது— இவர்கள் ஏதும் அதிகம் பேச முடியாது.

அதோ வந்துவிட்டார்கள் அதிகாரிகள், அவனை அழைத்துச் செல்ல.

மணமகன், மீண்டும் கைதியாகிறான்!

கரம் பிடித்துக் கண்களில் ஒத்திக் கொண்டாள்—இதோ அந்தக்

கரங்களில் மீண்டும் விலங்கு பூட்டு கின்றனர்.

திருமணம் முடிந்தது — அவனுக்கு மணவிழா விருந்து இல்லை- சிறையில் வழக்கமாகத் தரப்படும் ரொட்டியும் தண்ணீரும்தான்!!

மணவிழா முடிந்தது, மணமக்கள் இருவரும் கை கோத்துக் கொண்டு மலர்ச் சோலை செல்லப் போவதில்லை, அதோ மணமகன் போலீஸ் வண்டியில் ஏற்றப்பட்டு விட்டான்!

சென்று வருகிறேன்! — அவன் கை அசைத்துக் கூறுகிருன்.

கண்ணாளா! திருமணம் முடிந்ததும், பிரிவுதானா......? தையல் தேம்புகிருள்!

தாயகமே! சைப்ரசே! இங்கு இளம் தம்பதிகள், பிரித்துவிடப்படும் கொடுமையைப் பார்! பார்! அம்மா, உன் மக்களுக்கு வந்துற்ற அவதியைப் பார்! — ஊர் மக்கள் புலம்புகிருர்கள்.

நீ, ஏனடா, தம்பி, அழுகிருய்? என் கண்களிலே ஏன் நீர் துளிர்க்கிறது? என்ரு கேட்கிருய். என்னசெய்வது! கண்ணீர், அவர்கட்கு நாம் அளிக்கும் காணிக்கை!

சைப்ரஸ் தீவிலே இதைக் கண்டோம்! தம்பி! நாட்டுப்பற்று மக்களை எத்தகைய வீறுகொள்ளச் செய்கிறது, என்பது கண்டோம். எழுச்சி தரும் நிகழ்ச்சியாக அமைந்த திருமணத்தைக் கண்டோம்.

காதற் கணவனை எண்ணிக் கண்ணீர் உகுத்திட, அப்பெண்மணி சென்றுவிட்டாள்.

என் வாழ்வுக்குத் திருவும் மணமும் தேடிக்கொண்டேன், என் தாய்நாட்டுக்கு விடுதலையும் வாழ்வும் பெற்றளிக்க, இனி நான் செய்ய வேண்டியது என்ன என்ன என்று எண்ணித திட்டமிட்டபடி, மணாளன் சிறை சென்றுவிட்டான்.

கடிமணம் புரிந்துகொண்டான்— கடுஞ்சிறையில் கொண்டு சேர்த்தனர்—இத்தகைய காதகர் ஆட்சியை வீழ்த்துவது எங்ஙனம் என்று எண்ணிக் குமுறியபடி வீர புரி மக்கள் தத்தம் வீடுகளுக்கும், வயல்களுக்கும் சென்றுவிட்டனர்.

தம்பி! வா! இனியும் நமக்கு இங்கு என்ன வேலை? நமது தாயகமாம் திராவிடத்தின் விடுதலைக்காக, நாம் செய்யவேண்டிய பணியினைத் திறம்படச் செய்தற்கான, உள்ள உரம் தரும் மாநில மாநாடு, காணச் செல்வோம்!!

கரம் பிடித்த காதலியைக் கண்ணீர் பொழியும் நிலையில் விட்டு விட்டு, சிறைக் கோட்டம் சென்றுள்ள எழுச்சியை நினைவிலே வைத்துக்கொண்டு, திருச்சி மாநில மாநாட்டுக்குப் போய்ச் சேருவோம். தத்தமது நாடுகளை விடுவிக்க அரும்பாடு பட்டவர்கள், ஆற்றல் மிக்க வீரர்கள், தியாகிகள், அனைவரையும் மனதிலே கொண்டு பிறந்த நாட்டுக்கு வந்துற்ற இழிவும் இன்னலும் நீங்கிடப் பெருங் கிளர்ச்சியில் ஈடுபட, நம்மை நாம் பக்குவப்படுத்திக் கொள்வதற்கான பாசறையாக அமைந்துள்ள மாநில மாநாட்டுக்குச் செல்வோம்.

எல்லோரும் என் காதலில் சிக்குண்டு போயினர்—இதுகள் ஏனோ தாவிக் குதிக்கின்றன!

இதுகள் நடத்தும் கட்சி ஒரு அரசியல் கட்சியா? இது குழப்பக் கட்சி!

## புத்தர் பொன் மொழி

அர்த்தமற்ற பதங்களைத் தொகுத்த ஆயிரம் வாக்கியங்களைக் காட்டிலும் பொருளுள்ள ஒரே சொல் மேலானது. அதைக் கேட்டதும் ஒருவன் மன அமைதி அடைகிருன்.

தேர்தலுக்கு நிற்பார்களாமே— நிற்கட்டும்—நிற்கட்டும்—தீர்த்துக் கட்டிவிடுகிறேன்!

பெயர் மாற்ற ஒரு போராட்டமாம்—பூ! பூ!—இது ஒரு கட்சியா ..........

தம்பி! பச்சைத் தமிழர் காமராஜர் இதுபோலக் கேவலமாகப் பேசுகிருர், நமது கழகம் பற்றி!

உன் நோக்கத்தைக் கேவலம் என்கிருர்; உன் அறிவாற்றலை, அபத்தம் என்கிருர்; உன் வீரத்தைக் கேலி செய்கிருர்; தியாகத்தைத் தூசு என்கிருர்; நாட்டையே கூட அல்லவா, தமிழ்நாடு என்று அழைக்க மறுத்துக் கேவலப்படுத்துகிருர்.

இதற்கு — இவர்தம் ஆணவப் பேச்சுக்கு-அலட்சியப் போக்குக்கு —என்ன பதில் அளிப்பது—எவ்வகையில் பதில் அளிப்பது:

திருச்சி மாநில மாநாடு, வீரர் கோட்டம் என்பது விளக்கப்பட்டால்,

பட்டி தொட்டிகளிலிருந்தெல்லாம் பல்லாயிரவர் கிளம்பி, பல இலட்சமாகப் பெருகி எழுச்சி வெள்ளமாகக் காட்சி அளித்தது மாநில மாநாடு என்ருல்,

அங்கு எழுச்சிமிக்க சொற்பொழிவுகள், இனிமை பயக்கும் கலைவிருந்து இவற்ருேடு அமைந்து விடாமல், திறம்படப்பேசி, செயல்படத் துணிவுகொண்டு, தீவிரமான திட்டம் தீட்டினர் என்ருல்,

திருச்சி மாநிலமாநாடு அரசியல் வட்டாரத்துத் திருவிழா அல்ல, விடுதலை வரலாற்றிலே ஓர் கட்டம் என்பது விளக்கப்பட்டால்,

கேவலமாகப் பேசிவரும் காமராஜர், உண்மையை உணர முடியும்!

அவர் உணர்ந்தாலும் உணரா விட்டாலும், உலகு உணரும்.

உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு என்ருர் வள்ளுவர். உயர்ந்தோர் என்று அந்த உளப் பண்பு உணர்ந்த அறம் கூறும் பெரியோன் குறிப்பிட்டது, ஜாதியை அல்ல— குணத்தை — அறிவை — ஆற்றலை!

உலகம் உணரட்டும் தம்பி, உன்னையும் என்னையும் ஆட்கொண்டிருக்கும், விடுதலைக் கிளர்ச்சி, வீண்வேலை அல்ல என்பதனையும், உயர் இடம் அமர்ந்து கொண்டவர்களின் அலட்சியமும் ஆணவமும், அந்த விடுதலைக் கிளர்ச்சியைக் குலைத்துவிடாது என்பதனையும்.

தம்பி! சைப்ரஸ் தீவுத் திருமணத்திலே நாம் கண்ட எழுச்சி— எழில்—நினைவிலே பதிந்து நிற்கிறதல்லவா!

வாழ்க சைப்ரஸ்!—என்ற வாழ்த்தொலியை மணவிழாவிலும் கேட்டோம்.

வாழ்க திராவிடம்! — என்று முழக்கமிட்டபடி, திருச்சி செல்வோம், வா.

அன்பன்,

**அண்ணாத்துரை.**

# அடுத்த நடவடிக்கை

இலங்கையிலுள்ள தமிழ் பேசும் தொகுதிகள் 17ல் (புத்தளம உட்பட) தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் 10 தொகுதிகளினின்றும் தெரிந்தெடுத்துப் பாராளுமன்றம் அனுப்பப்பட்டிருக்கின்றார்கள். வடக்கே காங்கேசன் துறைக் கரையிலிருந்து, மேற்கே மன்னாரிலிருந்து தென்கிழக்குக் கோடியில் பொத்துவில் வரை மக்கள் 'தமிழரசு வேண்டும்' என்று தீர்ப்புக் கூறியிருக்கின்றார்கள்.

இப்படிப் பரந்த இலங்கைத் தமிழகத்தின் தீர்மானம் இவ்வாறாக, சிங்கள மக்களின் பிரதிநிதிகள் பாராளு மன்றம் வந்து புகுந்த அந்த மாத்திரத்திலேயே, தனிச் சிங்கள மந்திரி சபையை அமைத்ததும் அமைக்காததுமாய் அவசர அவசரமாகச் சிங்களத்தை மாத்திரம் அரசகரும மொழியாக ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கின்றனர். பிரதமர் பண்டாரநாயகா இதற்குத் தேவையான சட்டத்தை வகுக்கும்படியாக உத்தரவு பிறப்பித்துள்ளார் எனச் செய்தி சொல்லுகின்றது. இந்த நடவடிக்கைக்குத் தமிழ் பேசும் மக்கள் தகுந்த பதில் அளிக்க வேண்டும்—சாத்வீக முறையில்

"சிங்களம் மாத்திரம்" என்னும் சட்டம் ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் விவாதிக்கப்பட்டுப் பாராளும் மன்றத்தில் நிறைவேறும் என்பதில் சந்தேகமில்லை. அப்படி நிறைவேறும் நாளிலிருந்து ஒரு வாரம் அல்லது பத்து நாட்களுக்குள் தமிழரசுக் கட்சியின் இந்த வருட மாநில மாநாட்டை திரிகோண மலையில் நடாத்தும்படி நாம் கட்சியைக் கேட்டுக்கொள்ள வேண்டும். இந்த மகாநாடு கூடுமிடத்தைச் சாதாரணமாக கருதாமல் ஓர் புனித யாத்திரை ஸ்தலமாகப் பாவிக்க வேண்டும். "யாத்திரை" என்ற சொல்லை ஏன் பாவித்தேன் என்பதை நேயர்கள் அவதானிக்கவேண்டும். யாத்திரை செல்வோர் வாகனங்களில் செல்லாமல் கால் நடையாகச் செல்வது தமிழ்ப்பேசும் மக்களின் பண்டைக் கால மரபாகும். அதை இந்தக் காலத்திலும் சிலர் கடைப்பிடிக்கின்றார்கள்.

திரிகோணமலையானது, யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு ஆகிய மூன்று முனைகளிலிருந்தும் ஏறக்குறைய சமதூரத்தில் உள்ளது. இந்த மூன்று முனைகளிலிருந்தும் யாத்திரைகளை ஒழுங்கு பண்ண வேண்டும். முடியுமானால் நமது மலைநாட்டுத் தமிழ்ச் சகோதரர்களும் விரும்புவார்களானால் ஒத்துழைப்பார்களானால், கண்டி, அல்லது மாத்தளைமுனையிலிருந்து இன்னுமோர் நாலாவது யாத்திரைக் கூட்டத்தையும் ஒழுங்கு பண்ணலாம். இம் மூன்று அல்லது நான்கு முனைகளிலிருந்தும் மகாநாட்டில் பங்குபற்ற விரும்பும் தமிழரசுக் கட்சியினர் திரிகோணமலை யாத்திரையை ஆரம்பிப்பார்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கட்சியினர் யாழ்ப்பாணத்தில் குழுமிக் கட்சிக் கொடிகளுடனும் தமிழரசைப் பறைசாற்றும் அட்டைகளுடனும் யாத்திரை கிளம்புவார்கள். கண்டிரோட் மார்க்கமாகக் கால் நடையிற் செல்லும்பொழுது வழி வழியே உள்ள கிராமக் கட்சி யாத்திரீகர்களும் சேர்ந்துகொள்ள வேண்டும். வவுனியா சென்று ஹொரோப்பத்தான மார்க்கமாக திரிகோணமலை செல்ல வேண்டும்.

இதேபோல் புத்தளக் கட்சியினரும் மன்னார் கட்சியினரும் மன்னாரில் ஒருங்குகூடி யாத்திரை கிளம்பினால் மதவாச்சி சென்று வடக்கு நோக்கி வவுனியாவை அடைவார்கள். வவுனியாவிலே யாழ்ப்பாணக் கட்சியினரும் மன்னார் கட்சியினரும் வவுனியாக் கட்சியினரோடு ஒன்று சேர்ந்து ஒன்றுகூடி திரிகோண மலையை நோக்கி நடக்கலாம்.

இதேபோல அக்கரைப் பற்று அல்லது மட்டக்களப்பில் இருந்து புறப்படும் யாத்திரிகர்களும் மலைநாட்டுத் தமிழ் யாத்திரிகர்களும் திரிகோணமலையை அடைவார்கள்.

திரிகோணமலை நகரத்துள் இந்த யாத்திரிகர்கள் யாவரும் ஒரே சமயத்தில் உட்புகுவார்கள். இரண்டு அல்லது மூன்று பாதைகள் மார்க்கமாக நுழையலாம். நகரவாசிகள் எதிர்கொண்டழைத்துச் செல்வார்கள். மகாநாட்டுப் பந்தலையும் அதே முறையில் அடையலாம்.

மகாநாட்டுக்கு விஜயம் செய்யும்படி இலங்கையிலே இருக்கும் பிறநாட்டு ஸ்தானிகர்களை விருந்தினராக அழைக்க வேண்டும். அவர்கள் வருவார்கள், அல்லது பார்வையாளராகப் பிரதிநிதிகளை அனுப்புவார்கள் என்றே நம்புகிறோம். அத்தோடு உலகப் பத்திரிகை நிருபர்களையும் உள்ளூர்ப் பத்திரிகை நிருபர்களையும் தருவிக்க வேண்டும்.

இந்த மகாநாட்டிலே ஒரேயொரு தீர்மானம் மாத்திரம் விஷயமாக இருக்கவேண்டும். அத்தீர்மானத்தைத் 'திருமலைத் தீர்மானம்' என்று பெயரிட்டு நிறைவேற்றலாம். இலங்கை அரசாங்கத்துக்குத் தமிழ்ப்பேசும் மக்களின் தனிப் பிரதிநிதித்துவம் வாய்ந்த தமிழரசுக் கட்சி விடுக்கும் கோரிக்கையானது சமஷ்டி அரசியல் முறைப்படி தமிழ்ப்பேசும் பிரதேசங்களை ஓர் தமிழரசாக வகுத்துக் கொடுக்க வேண்டுமென்றும், குறிப்பிட்ட ஓர் கால எல்லைக்குள் (1956ம் ஆண்டு டிஸம்பர் மாதம் 31ந்தேதி நள்ளிரவு அல்லது 1957ம ஆண்டு ஜூன் மாதம் 30ந் திகதி நள்ளிரவுக்கு முன்பாக) இப்பொழுது அமுலில் இருக்கும் ஒற்றையாட்சி அரசமைப்புச் சட்டத்தை மாற்றி அதனிடத்தில் சமஷ்டி முறையைத் தழுவும் அரசமைப்புச் சட்டத்தை வகுத்து அதைச் சட்டமாக இயற்ற வேண்டுமென்றும், தவறினால், தமிழ்ப்பேசும் மக்கள் சட்டமறுப்பு முதலான நேரடி இயக்கங்களில் ஈடுபடுவார்கள் என்றும் அரசாங்கத்துக்கு அறிவித்தல் கொடுத்துத் தீர்மானத்தை நிறைவேற்றவேண்டும். இந்தத் தீர்மானத்தை தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் பதின்மரும் நேரில் கொண்டுபோய் சிங்களப் பிரதமருக்குச் சமர்ப்பிப்பார்கள்.

—[ சுதந்திரன் ]

---

## புத்தர் பொன் மொழி

மெய்ப்பொருளை உணராமல் ஐயத்தில் உழல்வோனை எதுவும் புனிதமாக்கி விடாது. ஆடையின்றி அலைதல், சடைத்தலை, புழுதியால் உடலைப் பூசிக்கொள்வது, உபவாசம், கட்டாந்தரையில் கிடத்தல், அசைவற்று அமர்ந்திருத்தல், ஆகிய எதுவும் புனிதமாக்கி விடாது.

"ஆருயிரே!

உன்னுடைய அன்பு என்னை உன்மத்தனுக்கி விட்டது. ஊனையும் இழந்தேன்; உறக்கமும் கொள்ள வில்லை. நண்பர்கள், கசக்கின்றனர். உன்னைவிட்டு வந்த எனக்கு, இந்த உலகமே பிடிக்கவில்லை. வாள் பிடித்து வாழ்வதையே பெருமையென எண்ணி யிருந்தேன். உன் வளையல் ஒலிக்கு இவ்வையகமே ஈடு எனக்கருதுகிறேன்! ஆனாலும், எனக்குக் கிடைக் கும் புகழ் உன்னைப் பூரிக்கச்செய்யுமே என்பதால், இப்போர் முனையில் கிடக்கிறேன். இல்லையென்ருல், இறக்கைகள் முளைத்த புருவைப்போல் வந்து உன் தோளில் தொத்திக் கொள்வேன். பீரங்கிச் சப்தத் துக்கு இடையிலும், பிரியவல்லியான உன்படம், எனக்குத் தெம்பூட்டுகிறது. உன்னை நினைத்தபடியே, களம் நோக்கிச் செல்கிறேன். உன் உருவத்தை நினைத்துக்கொண்டு, அந்தக் கனவுத் தோற்றத் துக்கு, களத்தில் கூட முத்தம் கொடுக்கிறேனடி, என் கண்மணி........"

*

இதுபோல எட்டுக் கடிதங்கள்! சுமார் அரை லட்சம் ரூபாய்க்கு ஏலம்போயின இங்கிலாந்தில் 1933-ல்!! இவைகளைத் தீட்டியது, கவிவாணனல்ல; காலமெல்லாம் போர், போர் என்றலைந்து ஐரோப் பாவையே கிடுகிடுக்கவைத்த பிரெஞ்சு மாவீரன் நெபோலியன். ஒவ் வொருநாளும், போர்க்களத்திலிருந்த படி தனது காதலி ஜோசபைனுக்கு இப் படிப்பட்ட கடிதங்களை தீட்டத் தவறு வதில்லையாம், அவன். அணங்கின் மீதுகொண்ட காதலின் சக்தி எப்படி யெல்லாம் ஆட்டிப்படைக்கிறது!!



ஜோசபைன், அப்படி என்ன பிர மாத அழகியோ என்ருல், இல்லை! ஆனால் ஆண்களின் மனோபாவ மறிந்து நடக்கக்கூடிய சரசி!! அந்த சரச குணம் ஒன்ருலேயே, சாதாரண ஏழைப் பெண்ணுன அவள் அவனை அடைந்தாள்.

*

பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு, சாதாரண வீர னை நெபோலியன் குடியரசுப்படைகளில் சிறந்தவ னுகப் பரிணமிக்கத் துவங்கிய நேரம். வெளிநாட்டுப் போரிலிருந்து பாரிசுக்குத் திரும்பிய அவனை 12-வய துப் பையனொருவன் பேட்டிகண்டான்.

"ஐயா! புரட்சியில் வெட்டுண்டு மாண்ட என் அப்பாவின் வாள் தங்கள் வசம் உள்ளதாமே?"

"ஆம், தம்பி!"

"அதைக் கொடுக்க முடியுமா, என்று என்னு டைய அம்மா கேட்டுவரச் சொன்னுர்கள்......"

"ஓ, கொடுக்கிறேன்"

"சரி!"

சிறுவன் போய்விட்டான். மறுநாள் அம்மா வந்தாள்—ஜோசைபைனுக்கும், நெபோலியனுக்கும் இப்படித்தான் முதற்சந்திப்பு மலர்ந்தது. அப்போது நெப்போலியன் எப்படி இருந்தானும் தெரியுமா? பெரிய தளபதிகூட அல்ல! அவனுடைய திறமை யைப்பற்றி அங்குமிங்கும் பேச்சு அடிபட்டுக்கொண் டிருந்தது. தலையெலாம், சிரங்குமயம், அதனால் மொட்டைவேறு அடித்துக்கொண்டு இருந்தான்! ஆனால், அவனுடைய பராக்கிரமத்தைப் பற்றியும், எதிர்காலத்தில் மிகப் பெரியவனுக வருவான் என்று பிறர் சொல்லக் கேள்விப்பட்டதைக்கொண்டும், அவனை எப்படியாவது வசப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று திட்டமிட்டுச் சந்திப்பை ஏற்படுத் திக் கொண்ட அவள், அவனுடைய அசிங்கமான தோற்றத்தைக் கண்டு பொருட்படுத்தவில்லை. இனிக்கப் பேசினுள்! ஏற்கனவே, மணமாகி ஒரு கணவனுடன் வாழ்ந்தவளாதலால் ஆண்களின் சுபாபத்தை நன்கு அறிந்திருந்தாள்! அந்த அஸ் திரம், அவளுக்கு வெற்றியைத் தந்தது. வீழ்ந்தான் வீரன், அந்த 'அனுபவ'க் களஞ்சியத்திடம். ஆறு வயது மூத்தவள்! இரு குழந்தைகளுக்குத் தாய்! அதனுல்தான்போலும் அவனை, தேன் குடித்த ஈயாக்க முடிந்தது அவளால்! சந்திப்புக்கு மூன்று திங்களுக்கெல்லாம், மணம் முடிந்தது. இரண்டு தினங்களுக்கெல்லாம், அவனுக்குப் புகழளித்த, இத்தாலி போருக்குப் புறப்பட்டுச் சென்ருன். அப் போது தீட்டிய கடிதங்கள்தான், அவை.

*

"பைத்தியக்காரன். புது வெறியில் உளறு கிருன்" என்று இக்கடிதங்களை, அலட்சியமாகக் கருதினுள், அவள். தனது 'தகுதி'க்கொப்ப ஒரு கள்ளக் காதலனையும் வைத்திருந் தாளாம், ஜோசபைன்! தனது கடி தங்களுக்குப் பதில் வராததுகண்ட நெபோலியன் துடிதுடித்துப் போவா னும். பழிக்குப் பழி வாங்குவதற்காக, எகிப்தில் போர் புரிந்துகொண்டிருந்த போது வேண்டுமென்றே ஒரு பெண்ணை அழைத்துக்கொண்டு வந்து அருகில் வைத்தபடி விருந்து அருந்தியதோடு இந்தச் செய்தி பாரி சுக்கு எட்டும்படியும் செய்தானும்! அவளும், அவனைப்போல புது விருந்து சுவைக்கும் நிலையிலிருந் தால், துடிதுடித்துப் போயிருப்பான் —அலுத்துபோனவள், அவன்; ஆகவே பரபரப்புக் காட்டவில்லை! இந்தச் சூழ்நிலை வளர்ந்தது — நெபோலியனை அவனது சகோதரிகள் கேலி அம்புகளால் வேறு துளைத்தனர் — சூழ்நிலைகள் வேறு அவனை பிரான் சுக்கே சக்ரவர்த்தியாக்கின. அதனுல், அவனை விவாகரத்து செய்துவிட்டு ஆஸ்திரியா நாட்டு மேரிலூசியை மணந்தான். திருமணம், அரசியல் நெருக்கடியால் உண்டானது. ஆதலால், லூசி, அவனை ஏமாற்றுவதிலிருந்தாளே ஒழிய ஒருபோதா வது இதயத்தைத் திறந்து காட்டியதில்லை; அவன் வீழ்ச்சி அடைந்துகொண்டிருந்த சமயத்தில் அவனை விட்டு ஓடிவிட்டாள், அதோடு ஒரே மகனையும் தந்தையை வெறுக்கும்படி சொல்லிக்கொடுத்தாள்.

எப்படி இருந்திருக்கும் அந்த மாவீரனுக்கு!

இதுபோன்ற சமயங்களிலெல்லாம் அவனுக்கு ஜோசபைன் நினைவே, வருமாம். அவள் இறந்து போய்விட்டதால், கல்லறைக்குச் சென்று கண்ணீர் கொட்டியபடி, "கண்ணே ஜோசபைன்! நீ எவ்வ ளவோ அலட்சியப்படுத்தினுலும், என்னை ஆதர வற்றவனுக்கிவிட்டு ஓடியிருக்கமாட்டாய்" என்று கதறுவானும்.

மாபெரும்வீரன்! வல்லரசுகள் பலவற்றை வீழ்த்தினுன் வீரத்தால்; ஆனுல் படத்திலிருக்கும் இப் பெண்ணின் இதய ராஜ்யத்தை அடைவதற் காக எவ்வளவோ பெருமுச்சுகளை சிந்தியும், பெற்ரு னில்லை!!

'வண்டு'

2-வது

# தி. மு. க.
# மாநில மாநாடு

தலைவர்: **இரா. நெடுஞ்செழியன்**

திறப்பாளர்: **ஜி. பி. சோமசுந்தரம்**

ஓவியக் காட்சித் திறப்பாளர்: **என். வி. நடராசன்**

வரவேற்பாளர்: **அம்பில்-தர்மலிங்கம்**

**மே 17, 18, 19, 20**
தேதிகளில்

**திருச்சி**
வள்ளுவர் நகரில்

கலை விருந்தளிப்போர்

திருவாவடுதுறை இராஜரத்தினம்
கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்
எம். ஜி. இராமச்சந்திரன்
எஸ். எஸ். இராசேந்திரன்
டி. வி. நாராயணசாமி
கே. ஆர். இராமசாமி
நாகூர் அனிபா
ஜி.கஸ்தூரி
பி. எஸ். செல்வா.

**எழுச்சியூட்டும் நாடகங்கள்**
**ஏற்றமிகு சொற்பொழிவுகள்**
**ஓவியக் காட்சி-ஊர்வல மாட்சி**
**இத்தனையும் உண்டு.**

**மாநாட்டுக் கட்டணம்**

| நான்கு நாட்களுக்கும் | ஆண் | பெண் |
|---|---|---|
| முதல் பிரிவு | 10—0—0 | 10—0—0 |
| இரண்டாவதுபிரிவு | 5—0—0 | 2—8—0 |
| மூன்ருவது பிரிவு | 3—0—0 | 1—8—0 |
| தனித்தனி ஒவ்வொரு நாளும்:— | | |
| முதல் பிரிவு | 3—0—0 | 3—0—0 |
| இரண்டாவதுபிரிவு | 1—8—0 | 0-12—0 |
| மூன்ருவது பிரிவு | 1—0—0 | 0—8—0 |

கால காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
...ர் சி. என். அண்ணுதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.